வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : news@eelanadu.lk மலர் : 03 05.01.2022 புதன்கிழமை இதழ் : 31 பக்கங்கள் : 16

## இந்திய பிரதமருக்கான கடிதம்:
# யாரை விலக்கிவிட்டும் வரையில் கையொப்பமிட்டு அனுப்புவோம்!

### ரெலோ கட்சி அறிவிப்பு



வவுனியா, ஜன. 05

"இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்புவதற்காக ரெலோ எடுத்த முயற்சியில் இருந்து யாராவது பின் வாங்க விரும்பினால் அல்லது கையொப்பமிட மறுத்தால் அது யாராக இருந்தாலும் அவர்களை விலக்கி வைத்துவிட்டு அந்த வரையில் கையொப்பமிட்டு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வோம்", என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற 15

## யாழ். வருகிறார் எதிர்க்கட்சி தலைவர்!

கொழும்பு, ஜன. 05

எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸ எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார், வவுனியா செல்லும் அவர் எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். அன்று காலை ஊடகங்களை சந்திக்கும் அவர், அதன் பின்னர் நயினாதீவுக்கு சென்று நாகபூசனி 15

## கொரோனாவால் 18 பேர் மரணம்!

கொழும்பு, ஜன. 05

கொரோனா தொற்றால் நேற்றுமுன்தினம் மட்டும் நாடளாவிய ரீதியில் 18 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கு கீழ் ஓர் ஆணும், 2 பெண்களுமாக மூவரும், 30 - 59 வயது பிரிவில் 2 ஆண்களும், 3 பெண்களுமாக ஐவரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7 ஆண்களும், 3 பெண்களுமாக 10 பேரும் அடங்குவர். 15

## இந்திய பிரதமருக்கான கடிதம்:
# வட, கிழக்கு தமிழ் கட்சிகள் மட்டும் கையொப்பமிட்டு அனுப்பத் திட்டம்!

யாழ்ப்பாணம், ஜனவரி 05

**இந்தியப் பிரதமருக்கு தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து அனுப்பவிருந்த கடிதத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரம் கையொப்பமிட்டு அனுப்புவது என்று ஏற்பாட்டு கட்சிகள் தீர்மானித்துள்ளன என்று நம்பகரமாக தெரிய வருகின்றது.**

இந்த நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோரை சந்தித்த பின்னர் தமிழ் பேசும் கட்சிகளை ஒருங்கிணைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் அறிவிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமரை கோரும் நோக்கில் கடந்த நவம்பர் 15

## திருமலை எண்ணெய் குதங்கள் இந்தியாவுக்கு வழங்க அனுமதி!

கொழும்பு, ஜன. 05

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கான உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என்று அமைச்சரவை வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

திருகோண 15



## உள்ளே இருந்தவாறு அரசாங்கத்தை விமர்சிப்போர் பதவி நீக்கப்படுவர்!

### அமைச்சர் ஜோன்ஸ்டன் விளக்கம்

கொழும்பு, ஜன 05

அரசுக்குள் உள்ள விடயங்கள் அரசுக்குள்ளே பேசப்படவேண்டும் எனவும், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அதனை மீறியதால் அவரை பதவி நீக்கம் செய்வதற்கு ஆளும் தரப்பு அனுமதி வழங்கியுள்ளது நெடுஞ்சாலைகள் அமைச்சர் 15

## நிவாரணங்கள் அறிவிப்பு தேர்தலுக்கானது அல்ல!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 05

இலங்கையின் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று அறிவித்த வரி நீக்கம் உட்பட்ட நிவாரணப் பொதி எந்தவொரு தேர்தலையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட விடயம் அல்ல என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய செய்தியா 15

## சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை நிதியுதவி கோராது!

### இணக்கமின்றி முடிந்தது அமைச்சரவை!

கொழும்ப, ஜன. 05

சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியுதவி கோருவதற்கான அமைச்சரவைக் கூட்டம் இணக்கமின்றி முடிந்தது.

இதனால், இலங்கை நிதி கோரி சர்வதேச நாணய நிதியத்தை நாடாது என்று தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் இரவு நடந்த அமைச்சரவை கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவி கோருவதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் 15

## 19ஆவது திருத்தத்தை உடன் அமுல்படுத்துக!

### அரசிடம் கோருகிறார் மைத்திரி



கொழும்பு, ஜன. 05

20ஆவது அரசமைப்பு திருத்தத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்றும் 19ஆவது அரசமைப்பு திருத்தத்திலுள்ள குறைகளை திருத்தி மீண்டும் நடைமுறைப்படுத்தவேண்டுமெனவும் முன்னாள் ஜனாதபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மாத்தளை கிரேண்ட் மவுன்டன் ஹோட்டலில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் மாவட்ட 15

## திருமலையில் சஜித் பிரேமதாஸ

திருமலை, ஜன. 05

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று திருகோண மலைக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலையில் எதிர்வரும் இரு தினங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளை ஆரம்பித்து வைக் 15

## அரசை சாடிய சுசில் பிரேமஜயந்தவின் அமைச்சுப் பதவி அதிரடியாகப் பறிப்பு!

கொழும்பு, ஜன. 05

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேம ஜயந்த உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் நீக்கப்பட்டார்.

இந்த விடயத்தை ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இவ்வாறு அவர் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளாரென ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் 15



## இப்படியும் நடக்கிறது...!

டிசெம்பர் இருபத்திஓராம் திகதி தயாரித்த ஆவணத்திலிருந்து தமிழ் அரசுக்கட்சி ஒரு துளியே னும் பின்வாங்காது என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு சொல்வதற்கு அவருக்கு முழு உரிமையும் இருக்கிறதுதான்.

ஆனால், இந்த ஆவணம் குறித்து தமது நிலைப் பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் மனோ கணேசனும் கடந்த முப்பத்தியோராம் திகதி சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்து தத்தமது நிலைப்பாட்டை விளக்கியிருந்தனர்.

குறிப்பாக ஹக்கீம் தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தியபோது, வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது நாம் எவ்வளவு தூரம் வலியுறுத்தினாலும் நடக்கப் போவதில்லை என்பது எனக்கு நன்கு தெரியும், ஆனாலும் அதனை வலியுறுத்தி நான் கடிதத்தில் கையெழுத்திட்டுவிட்டு அதனை எனது மக்கள் ஒவ் வொருவருக்கும் போய் விளங்கப்படுத்த முடியாதல் லவா? அதனால் தான் அதனை நான் தவிர்க்கவேண்டி யிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

உதாரணத்திற்கு அவர் சொன்ன விடயம் மிகக் காத்திரமானது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி சமர்ப்பித்த இறுதி அறிக்கையில், (தருஷ்மன் அறிக்கை) விடுதலைப் புலிகளும் அரச படைகளும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டனர் என்று தெரிவித்திருந்தது.

ஆனால் அந்த அறிக்கையை சுட்டிக்காட்டி கூட்ட மைப்பு ஜெனிவாவுக்கு கடைசியாக அனுப்பிய கடிதத் தில், புலிகளும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்ட னர் என்று குறிப்பிட்டிருந்தது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பலையை ஏற்படுத்தியிருந்தது.

அந்த ஆவணத்தை தயாரித்த சுமந்திரன், அந்த அறிக்கையை சுட்டிக்காட்டியே அரச படைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தார். அதில் தவறில்லை என்றபோதிலும், புலிகள்மீது கூட்ட மைப்பு புகார் செய்வதா என்றே தமிழ் மக்கள் கொதித்தெழுந்தனர். அதேபோலத்தான், தான் இந்த ஆவணத்தில் கையொழுத்திட்டால் முஸ்லிம் மக்க ளும் பிரதிபலிப்பார்கள் என்ற அவரது விவாதம் நியா யமானதே. அதுமாத்திரமன்றி அவரின் அரசியல் போட்டியாளர்கள் இதனை பாரிய பிரசாரமாக்கி விடுவார்கள் என்பதையும் அவர் தெளிவுபடுத் தியிருந்தாராம்.

அவரின் நியாயமான கோரிக்கையை ஏற்று, அவர் கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக புதிய ஆவணத்தை தயாரிக்குமாறு சம்பந்தன் கேட்டிருந்தார்.

அதனால் கடந்த முப்பத்தியோராம் திகதி சுமந்தி ரனின் இல்லத்தில் கூடிய ஹக்கீம், செல்வம், சித்தர் ஆகிய தலைவர்கள் பலமணிநேரம் செலவுசெய்து ஓர் ஆவணத்தை தயாரித்த பின்னர், இருபத்தி ஓராம் திகதிய ஆவணத்திலிருந்து துளியளவேனும் பின் வாங்க முடியாது என்று சம்பந்தன் தெரிவித்திருக் கிறார்.

அவ்வாறு தெரிவிப்பதெனில், முப்பதாம் திகதியே அதனை திட்டவட்டமாக தெரிவித்திருந்தால் மீண்டும் சுமந்திரனின் இல்லத்தில் பல மணிநேரங் களை இந்தத் தலைவர்கள் செலவிட்டிருக்கவே தேவை இருந்திருக்காதே.

சம்பந்தன் என்ன நினைக்கிறார் என்பது தெரிய வில்லை. நேற்றைய இந்தப் பத்தியில் லண்டன் நண் பர் ஒருவர் கேட்டதுபோல, சம்பந்தனும் பதினைந் தாம் திகதிவரைக்கும் காலத்தைக் கடத்த முயன்று கொண்டிருக்கிறாரா என்றே கேட்கத் தோன்றுகின்றது. அல்லது பனங்காட்டன் முன்பொரு தடவை ஏழுதி யதுபோல, கொழும்பு இல்ல விவகாரம் சம்பந்தனுக்கு சங்கடத்தைக் கொடுக்கின்றதா?'

- ஊர்க்குருவி

# பொலிஸ் ஆணைக்குழு சேவைக்கு வடக்கு, கிழக்கில் வரவேற்பில்லை!

### ஆணைக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்

மட்டக்களப்பு, ஜன. 05

“தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் செயல்பாடானது வட, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வரவேற்கப் பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் அதன் செயல்பாடுகள் மக்களை சென்றடையவில்லை என்ற குறைபாடுகளும் உள்ளன.”, என்று தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ரி. பி. பரமேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

அத்துடன், 1960 என்ற விசேட தொலைபேசி இலக் கத்துக்கு அழைப்பு ஏற்படுத்தி முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும். எழுத்து மூலமே இது வரை பொலிஸ் முறைப்பாடுகள் ஏற்கப்பட்ட நிலையில் ஜனாதி பதியின் பணிப்புரைக்கு அமைய இந்தத் திட்டம் உருவாக்கப்பட் டுள்ளது என்றும் கூறினார்.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் திறப்பு விழா வில் நேற்று பங்கேற்றபோதே அவர் மேற்கண்டாவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

1960 என்னும் விசேட 24மணி நேர சேவை மூலம் பொதுமக்கள் எந்த நேரமும் பொலிஸாரை தொடர்பு கொள்ளமுடியும். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடாக அவர்களின் முறைப்பாட்டை ஏற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

கிழக்கு மாகாணம் பெரிய தொரு மாகாணம். மூன்று மாவட்டங்கள் உள்ளன. இவை அனைத்துக்கும் ஒரு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலு வலகத்தை வைத்து கடமையாற் றுவது என்பது மிகவும் கஷ்ட மான விடயமாகவுள்ளது. மக்க ளுக்கு அண்மையாக செல்ல வேண்டிய பொறுப்பு உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களுடன் பொலிஸ் திணைக்களத்தை நெருங்கி பணி யாற்றுவதற்கான நடவடிக்கை களை எதிர்காலத்தில் முன்னெ டுப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளவுள்ளோம் - என்றும் கூறினார். (ஐ- 6)

# ஊழல், இலஞ்சத்தை ஒழிக்க நிபந்தனையின்றி ஆதரவு!

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

திருகோணமலை, ஜன. 05

“இன்று நாட்டில் தலை விரித்தாடுவது திருட்டு, ஊழல் மற்றும் இலஞ்சம் எனத் தெரி வித்த எதிர்க்கட்சித் தலைவர் இந்த நிலையை முழுமையாக இல்லாதொழிக்க ஐக்கிய மக் கள் சக்தி நிபந்தனையின்றி முன் நிற்கும்”, என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் செல்வத் தில் கோடிக்கணக்கான ரூபாய் கள் ஊழல்களால் விழுங்கப்படு கின்றன. எனவே, உடனடியாக செய்ய வேண்டியது நாட்டில் ஊழலை இல்லாது ஒழிப்பதா கும் என்றும் அவர் கூறினார்.

‘பிரபஞ்சம்’ திட்டத்தின் கீழ் டிஜிற்றல் கணனி திரைகள், கணினி உபகரணங்களை வழங் கலின் இரண்டாம் கட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தத் திட்டத்தின் கீழ், 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்



மதிப்பிலான வகுப்பறைகளுக் கான டிஜிற்றல் கணனித் திரை கள் மற்றும் கணனி உபகரணங் களை திருகோணமலை நிலா வெளி சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்திற்கு எதிர்க் கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வழங்கி வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் எண்ணக்கருவாக அமைந்து செயற்படும் ‘பிரபஞ்சம்’ நிகழ்ச் சித் திட்டம் நாட்டின் பின்தங் கிய பாடசாலைக் கல்வி முறை யில் கல்வி கற்கும் பிள்ளைக ளின் நவீன தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகை யில் வடிவமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரச்னைகளுக்கு சாதகமான தீர்வு

### அரச மருத்துவர் சங்கம் கூறுகிறது

கொழும்பு, ஜன. 05

பிரச்னைகளுக்குச் சாதகமான தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.


பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வுடன் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற கலந்து ரையாடலிலேயே அரச மருத் துவ அதிகாரி சங்க இடமாற்ற சபை தொடர்பான பிரச்னைக ளுக்கு தீர்வு கிடைக்கப்பெற் றுள்ளதாக அந்த சங்கம் தெரி வித்துள்ளது.

மேலும், நிர்வாக சபை வைத் திய உத்தியோகத்தர் தொடர் பாக ஆராயப் பிரதமர் குழு வொன்றை நியமித்துள்ளார் என அரச மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக்குழு ஆகிய வற்றின் உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித் தார். (அ)

# மன்னார் நகரப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

மன்னார், ஜன. 05

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு பர வலை கட்டுப்படுத்தும் நோக் கில் பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனை, மன்னார் பிராந் திய சுகாதார வைத்திய அதி காரி பணிமனை மற்றும் பிர தேச செயலகம்,மாவட்ட செய லகம் இணைந்து முன்னெடுக் கும் டெங்கு ஒழிப்புச் செயல் திட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை மன்னார் பிரதேச வைத் திய அதிகாரி பிரிவில் பல இடங்களில் முன்னெடுக்கப் பட்டது.



வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடை யாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல், அதே நேரம் நுளம்பு பெருக்கத் துக்கு சூழல் காணப்படும் வீடுக ளின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் முகமாக சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரதேச செயலக உத்தியோகத் தர்கள், டெங்கு ஒழிப்பு செய லணி, உத்தியோகத் தர்கள், பாதுகாப்புத் துறையினர் விசேட கள விஜய செயல்பாடு களையும் முன்னெடுத்தனர்.

அதேவேளை, மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் வைத்தியசாலை பகுதிகளைச் சூழ உள்ள பகுதிகளில் இராணு வத்தினரின் உதவியுடன் விசேட சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் இவ்வாரம் முழு வதும் டெங்கு ஒழிப்பு வார மாக பிரகடனப்படுத்தப்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Eelanadu ஈழநாடு
05.01.2021 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 730 1370**

## தமிழ் தேசிய கட்சிகள் செய்ய வேண்டியது?

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் டி. பி. எல். எவ். (புளொட்) கட்சிகளால் முன்னெடுக்கப்பட்ட - தமிழ் பேசும் மக்களின் கட்சிகளை, ஒரு கோரிக்கையின் கீழ், ஒன்றுபடுத்தும் முயற்சியானது, இன்னும் முற்றுப் பெறவில்லை. இது தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்த போதிலும் கூட, குறித்த விடயம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஆரம்பத்தில் ரெலோவின் முன்னெடுப்பு தொடர்பில் விமர்சனங்களை வெளியிட்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியினர், பின்னர் இதில் பங்குகொண்டிருந்தனர். தங்களின் வரைவை சமர்ப்பித்திருந்தனர். பின்னர், அனைவரின் பங்களிப் போடும்தான், இறுதி வரைவு பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால், தற்போது குறித்த ஆவணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கையெழுத்திடுவதற்கு தயங்கும் நிலையில், மீளவும் ஓர் இழுபறிநிலைமை தோன்றியிருக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்று குறிப்பிடும்போது - அதில் வடக்கு கிழக்கு இணைப்பும் உள்ளடங்கியிருக்கின்றது. இந்த விடயத்தை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆட்சேபித்திருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து ஹக்கீம் குறித்த விடயத்தில் மாற்றங்களை கோரியிருக்கும் நிலையில், மீளவும் இழுபறி நிலைமையொன்று தோன்றியிருக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிரணியில் இருப்பதாகக்கூறினாலும்கூட, அவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டு முயற்சியை குழப்பும் நோக்கில்கூட, இவ்வாறானதோர் எதிர்ப்பை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கலாம்.

இதனை விமர்சித்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர், ஹரீஸ், தங்களின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்ததாக குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், இது தவறானது. ஏனெனில், 1988, நவம்பரில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டிருந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாமல், பின்னர் எவ்வாறு மாகாண சபைத் தேர்தலில் அஷ்ரப் போட்டியிட்டிருக்க முடியும்? எனவே, இது வேண்டுமென்றே காலத்தை கடத்தும் ஒரு செயலாகவே தெரிகின்றது. எனவே, இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள், ஒரு விரைவான முடிவுக்கு வருவது அவசியம்.

ஹக்கீம் இந்த விடயத்தில் கட்சி சார்ந்து பிரச்னைகளை எதிர்கொண்டால், அதனை ஏற்றுக்கொண்டு, அவரை நட்புரீதியில் விலத்திவிட்டு செல்வதே சரியானது. ஏனெனில், முஸ்லிம்களுக்காக தமிழ் மக்களின் அடிப்படையான விடயங்களில் விட்டுக் கொடுப்புக்களை செய்ய வேண்டியதில்லை. அதே வேளை சகோதர மக்கள் என்னும் வகையில் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலிக்கலாம் ஆனால், இந்த விடயத்தில் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஏனெனில், இது ஏற்கனவே நடைமுறையிலுள்ள இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் தொடர்பானது. இந்த விடயத்தில் இந்தியா தலையீடு செய்ய வேண்டும் என்பதே குறித்த கோரிக்கையின் சாரம்சமாகும். எனவே, இதில் குழப்புவதற்கு எதுவுமில்லை.

இதேவேளை தமிழ் மக்களுக்கான இறுதியான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு என்பதும் இந்த ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. வேறுபட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளை இணைத்துக் கொண்டு செல்லும்போது, இது போன்ற பிரச்னைகள் ஏற்படுவது இயல்பானதுதான். ஆனால், முதலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு, ஏனையவர்களிடம் சென்றிருந்தால் இந்த இழுபறிநிலையை தடுத்திருக்கலாம். எனினும் இப்போது பிரச்னை தெளிவாகத் தெரிகின்றது. எனவே, பிரச்னைக்கான தீர்வை காண்பதுதான், இப்போது செய்ய வேண்டியதாகும். உடன்படும் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தையும் இணைத்துக் கொண்டு, விரைந்து விடயத்திற்கு முற்றுப்புள்ளியிட வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் போன்று தமிழ் முற்போக்கு கூட்டணியும் தயங்கினால் அவர்களின் தயக்கத்தை ஏற்றுக் கொண்டு, தமிழ் தேசிய கட்சிகள் மட்டும் தங்களின் ஆவணத்தை இந்திய பிரதமருக்கு அனுப்புவதுதான் சரியானது.

இதில், வேறு தெரிவுகள் எதுவுமில்லை. ஏனெனில், தமிழ் மக்களின் அடிப்படையான விடயங்களில் சமரசம் செய்ய முடியாது. ஆனால், முடிந்தவரையில் அனைவரையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதுதான் இன்றைய காலத்திற்கு தேவையானது. எனினும், அவர்களால் முடியாதபோது, தமிழ்த் தேசிய கட்சிகளின் முன்னால் வேறு தெரிவுகள் இல்லை. ஒவ்வொரு சமூகங்களின் தலைமைகளும், தங்கள் சமூகத்தின் நலன்களை கருத்தில் கொள்வதிலுள்ள நியாயத்தை, எவரும் மறுதலிக்க முடியாது.



# மக்கள் சக்தி மாபெரும் சக்தி; எச்சரிக்கும் திஸ்ஸ விதாரண!

**அலசுவது இராஜதந்திரி**

*ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்காக மக்கள் வீதிகளில் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.*

*அச்சமயம் மறைந்த பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி நிலவியிருந்தது. அன்றைய பொருளாதாரச் சிக்கல்கள், அது சார்ந்த சமூகவியல் பிரச்னைகள் என்பவை கூட அன்று ரோஹண விஜயவீர தலைமையிலான ஜே. வி. பி. (மக்கள் விடுதலை முன்னணி) கிளர்ச்சிக்கு வழியமைத்திருந்தது.*

*எனவே, எழுபதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சியை நினை வூட்டி எச்சரிப்பதாகவே ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மக்கள் சக்தி மாபெரும் சக்தி எனக் கூறியுள்ளதோடு இன்றைய ஆளும் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவது சந்தேகமே எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

*பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் இலங்கையின் இன்றுள்ள மூத்த இடது சாரி தலைவர்களாவர். இவர்கள் பெரிதும் இன்றைய பொருளாதார நிலவரம் குறித்து ஆட்சியாளர்களை அடிக்கடி அச்சுறுத்தி வருவோராக இருக்கின்றனர். இதுதவிர, மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே. வி. பி.) அரசை கடுமையாக இன்றைய பொருளாதார நிலவரம் குறித்து எச்சரிக்கை செய்து வருகின்றது.*

*இத்தகைய பின்னணியில் ஆட்சி அதிகாரங்களில் இருப்போர் தற்போது மக்களுக்கு பல தரப்பட்ட நிவாரணங்களை அறிவித்துள்ளபோதிலும் அந்த நிவாரணங்கள் வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக இந்தியா, சீனா ஆகிய நாடுகளிடமிருந்து பெறப்படும் நிதியுதவி மூலமாகவே மக்களுக்கு வழங்கப்படுவதன் மூலம் நாட்டை மேலும் கடனாளியாக்கும் நடவடிக்கைகளிலேயே அரசின் நிவாரண திட்டங்கள் விளங்குவதை அவதானிக்க முடிகின்றது.*

*பேராசிரியர் திஸ்ஸ விதாரண கருத்து வெளியிட்டபோது யுத்தத்துக்குப் பின்னர் நாட்டை பொருளாதார ரீதியாக இன்றைய ஆட்சியாளர்கள் முன்னேற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்பே நாட்டு மக்களிடம் நிலவியிருந்தது. ஆனால், இன்று அனைத்துமே தலைகீழாக மாறியுள்ளதையே நாட்டு மக்கள் உணர ஆரம்பித்துள்ளதோடு பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டதுபோல அடுத்து வரும் தேர்தல்களில் இன்றைய ஆட்சியாளர்கள் மண் கவ்வுவது பெரிதும் உறுதியாகியுள்ளது.*

*சமையல் எரிவாயுவுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தால் பல வெதுப்பகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவை கடந்த சில தினங்களில் இழுத்து மூடப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது. உணவகங்கள் பல மூடப்பட்டுள்ளன என்பதோடு, தொடர்ந்தும் மூடப்பட்டு வருவதற்கு சமையல் எரிவாயு தட்டுப்பாடு மாத்திரம் காரணமல்ல. கூடுதல் விலையில் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்து, பின்னர் அவ்விலைக்கு ஏற்றாற்போல தமது பண்டங்களை விற்பனை செய்ய முடியாதுள்ளதென்பதே அவர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது.*

*இத்தகைய பின்னணியில் தற்போது இன, மத ரீதியான குழப்பங்கள் தலையெடுக்கும் சாத்தியங்களும் பலமடைய ஆரம்பித்துள்ளன.*

*கடந்த வாரம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆலயங்கள் சிலவற்றில் சிலைகள் உடைகப்பட்டும் திருடப்பட்டும் இருந்தன. தற்போது மலையகத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் நுவரெலியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய மிலேச்சத்தனமான சம்பவங்களை நோக்கும் போது இன, மத ரீதியான முறுகல்களை வலுவடைய வைத்து நாட்டு மக்களை பொருளாதார நிலவரம் குறித்த பிரச்னைகளின் மீதான அவதானிப்பிலிருந்தும் திசை திருப்ப வைக்கும் திரைமறைவு சம்பவங்கள் நடக்கின்றதோ என்றே எண்ணச் செய்கின்றது.*

*எது எப்படியிருந்நதபோதிலும் இன்றைய ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டது போல இனிவருங்காலங்களில் வரப்போகும் தேர்தல்களில் மட்டும் இன்றைய ஆட்சியாளர்கள் மண்கவ்வப்போவதில்லை. இந்த ஆண்டில் மக்களின் அதிருப்தியால் அரசு ஆட்சியிலிருந்து துரத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருத முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
மேலதிகாரியின் கடுமை மெல்ல மெல்ல மாறும். குழப்பமான மனநிலை அகலுவதால் செயலில் தெளிவு வரும். கூடுதல் முயற்சி காரணமாக நன்மைகள் நிகழும்.

**இடபம்**
மனதிடம் அதிகரிக்கும். செயலில் உத்வேகம் பிறக்கும். உங்களது செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும். வெற்றி வரும். திடீர் வரவு உண்டு. பயம் நீங்கும்.

**மிதுனம்**
முன்யோசனையுடன் கவனமாக திட்டமிடுவது அவசியம். யாரைப் பற்றியும் யாரிடமும் குறைகூற வேண்டாம். வீட்டை புதுப்பித்து பலன் அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கடகம்**
புதிய தம்பதிக்கு குழந்தைப்பேறு உறுதியாகும். நண்பர்கள் இடையே முன்பை விட ஒற்றுமை அதிகரிக்கும். நிலம், வீடு போன்றவற்றின் மூலம் வரவு உண்டு.

**சிம்மம்**
புதிய நண்பர் கிடைப்பார். பணியிடத்தில் இருந்த குழப்பம் நீங்கும். பங்குச் சந்தையில் ஈடுபட்டுள்ளவர்கள் வளம் பெறுவார்கள். சகபணியாளர்கள் இடையே நல்லுறவு ஏற்படுவதால் நிம்மதி வரும்.

**கன்னி**
திறமையை வெளிப்படுத்தி மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். அரசியல்வாதிகள் புதிய உத்வேகத்துடன் பணியாற்றுவார்கள். சுணங்கிக் கிடந்த செயல்பாடுகளில் இன்று வேகம் அதிகரிக்கும்.

**துலாம்**
வீடு, மனை வாங்கும் திட்டம் நிறைவேறும். மகிழ்ச்சி கூடும். உங்களின் செயல்திறன் அதிகரிக்கும். புதிய விஷயங்கள் கற்பீர்கள். பணியில் சிறப்பான முன்னேற்றத்தினை காண வழிபிறக்கும்.

**விருட்சிகம்**
உங்களுக்கு உதவும் நண்பரை பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொழிலில் லாபம் பெற அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். உங்களது புதிய முயற்சிகளால் புகழ் அதிகரிக்கும்.

**தனுசு**
தேவையற்ற பயங்களால் நிம்மதி இழக்க வேண்டாம். யாரையும் கடுமையாகப் பேச வேண்டாம். அதுவே நல்லது. உங்களின் செயல்பாடு காரணமாக மேன்மை அடைவீர்கள்.

**மகரம்**
பணியாளர்கள் ஓய்வில்லாமல் கூடுதலாக உழைப்பீர்கள். குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றம் சிறப்படையும். ஆடம்பர செலவுகள் குறைந்து சேமிப்பு உயரும்.

**கும்பம்**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் கூடிவர வாய்ப்பு உண்டு. உறவினர்கள் பற்றி இருந்து வந்த மன வருத்தம் மறையும். கடன் வாங்குவதை முற்றிலுமாக தவிர்ப்பது நல்லது.

**மீனம்**
எதிர்பாராத நபர் ஒருவர் மூலம் நன்மை அடைவீர்கள். அடுத்தவர்களின் தரம் அறிந்து மதிப்பளிப்பது நல்லது. தாயாருக்கு நன்மை ஏற்படும். வீடு வாங்கும் யோகம் உண்டு.

# ஏழு பேர் விடுதலை தொடர்பில் ஆளுநருக்கு அழுத்தம் தருவோம்

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி சொல்கிறார்

சென்னை, ஜன. 05

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் ஏழு பேரின் விடுதலை தொடர்பாக ஆளுநருக்கு அழுத்தம் தருவோம் என தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.



சேலம் மத்திய சிறையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று முன்தினம் அய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சேலம் மத்திய சிறையில் 1,351 தடுப்பு கைதிகள் மற்றும் தண்டனைக் கைதிகளாக இருக்கிறார்கள். மேலும், பெண்கள் சிறையில் 78 பேர் உள்ளனர். சேலம் மத்திய சிறைக்கு வரக்கூடிய கைதிகள் அனைவருக்கும் மாவட்ட சிறையிலேயே கொரோனா தொற்று பரிசோதனை செய்து, தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்ட பின்னரே சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். 10 நாட்களுக்கு ஒரு முறை கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான ஏழு பேரின் விடுதலை வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. விடுதலை செய்வது குறித்து குடியரசுத் தலைவருக்கு அனுப்ப தேவையில்லை. ஆளுநரே முடிவு எடுக்கலாம் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அடுத்து விசாரணைக்கு வரும் போது, உச்ச நீதிமன்றம் நல்ல முடிவை எடுக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளோம். ஏழு பேர் விடுதலை தொடர்பாக ஆளுநருக்கு அழுத்தம் தருவோம்." இவ்வாறு அவர் கூறினார்.

---

# அம்மா பெயரிலான திட்டங்களை மூடுவதில் தி.மு.க. அரசு குறியாக இருப்பது தவறானது

## டி.டி.வி தினகரன் கண்டனம்



சென்னை, ஜன. 05

அம்மா பெயரில் உள்ள திட்டங்களை மூடுவதிலேயே தி.மு.க. அரசு குறியாக இருப்பது தவறானது என்று அம்மா தி.மு.க. தலைவர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

தமிழகம் முழுவதும் அம்மா மினி கிளினிக்குகள் மூடப்பட்டிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூறியிருப்பது கண்டனத்திற்குரியது. அரசியல் காழ்ப்புணர்ச்சியால் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை.

அந்த கிளினிக்குகள் ஓராண்டு திட்டமாக ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் கூறியிருப்பது உண்மையாக இருந்தாலும்கூட மக்கள் நலன் கருதி அவற்றை நீடித்து செயல்படுத்தக் கூடாதா? அப்படி செய்வது தானே ஓர் அரசாங்கத்தின் சரியான பணியாக இருக்க முடியும்?

புரட்சித்தலைவி அம்மா பெயரிலான திட்டங்களை எல்லாம் மூடுவதிலேயே தி.மு.க. அரசு குறியாக இருப்பது தவறானது. அம்மா மினி கிளினிக்கை தொடர்ந்து, ஏழை, எளிய மக்களின் பசியாற்றி வரும் அம்மா உணவகங்களும் மூடப்படுமோ? என்ற கவலை ஏற்படுகிறது" என்று பதிவிட்டுள்ளார்.

---

# மோடி தமிழகத்திற்கு வருவதால் எமக்கு என்ன பலன் இருக்கிறது?

## கேள்வி எழுப்புகிறார் தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி

சென்னை, ஜன. 05,

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகை எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை. அதனால், வருத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம். அவரின் வருகையை நாங்கள் விரும்பவும் இல்லை. வருவதால் தமிழகத்திற்கு என்ன பலன் இருக்கிறது?" எனக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ் அழகிரி.



இது குறித்து அவர் நேற்று தெரிவித்திருப்பதாவது:

"பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டிற்கு மருத்துவக் கல்லூரிகளை திறந்து வைக்க வருகிறார். இதில், எங்களின் பார்வை வேறுபட்டது அல்ல. ஆனால், அவர் தமிழக நலன்களுக்கு எதிராக இருக்கிறார் என்று மக்கள் நினைக்கிறார்கள். அதனாலேயே, தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு மிகப்பெரிய தோல்வியையும் கொடுத்தார்கள்.

தமிழக மக்களுக்கு எதிராகவும் விரோதமாகவும் இருப்பதால் மோடியின் வருகை எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை. அதனால், வருத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம். அவரின் வருகையை நாங்கள் விரும்பவும் இல்லை. வருவதால் தமிழகத்திற்கு என்ன பலன் இருக்கிறது?". அதேசமயம், திமுக வரவேற்பதை அவர்களிடம்தான் கேட்கவேண்டும். நாங்கள் கூட்டணியில் இருப்பதாலேயே எல்லாவற்றிற்கும் எங்களிடம் தி.மு.க. கேட்டுக்கொண்டு செயல்படவேண்டும் என்ற அவசியமில்லை.

தி.மு.க. கொள்கை ரீதியில் உறுதியாகத்தான் இருக்கிறது. மென்மையான போக்கினை கடைப்பிடிக்கவில்லை. உதாரணமாக, மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப்பெறவேண்டும் என்றும் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராகவும் நீட் தேர்விற்கு எதிராகவும் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார்கள். பா.ஜ.கவுடன் மென்மையான போக்கினை கடைப்பிடித்திருந்தால் இப்படியெல்லாம் தீர்மானம் கொண்டு வந்திருக்க மாட்டார்கள்." - என்றார்.

# யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளராக கே.நந்தகுமாரன்



யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமாரன் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவினால் நேற்று முன்தினம் இந்த நியமனக்கடிதம் வழங்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அவர் தனது பதவியை பொறுப்பேற்றார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக இருந்த மருத்துவர் த.சத்தியமூர்த்தி மேற்படிப்புக்காக மீண்டும் வெளிநாடு சென்றுள்ள நிலையில் தற்காலிகமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மருத்துவர் கே.நந்தகுமாரன் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் தொடர்ந்து செயற்படுவார். (அ-03)

# மருந்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## 2 மாதங்களுக்கு தேவையானவையே கையிருப்பில்

கொழும்பு, ஜன. 05

**நாட்டில் இரண்டு மாதங்களுக்கு தேவையான மருந்துகளே கையிருப்பில் உள்ளதாக இலங்கை மருந்து இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மருந்து இறக்குமதிக்கான முன்பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் நாணயக் கடிதத்தைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மருந்து இறக்குமதிக்காக முன்னர் வழங்கப்பட்ட முக்கியத்துவம் தற்போது வழங்கப்படுவதில்லையென அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 80 சதவீதமானவை இறக்குமதி செய்யப்படுகின்றன. நாட்டில் தற்போது மருந்து களுக்கான தட்டுப்பாடு இல்லை. எனினும், இறக்குமதிக்கான தடைகளை உடனடியாக நீக்காவிடின் பல அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# தற்போதைய அமைச்சரவை அரசமைப்புக்கு முரணானது

## சோபித தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் தற்போதைய அமைச்சரவையானது அரசமைப்புக்கு முரணானது என்று ஓமல்பே சோபித தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். எம்பிலிப்பிட்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்யாதவர்கள் தமது பதவிகளில் செயற்பட முடியாது.

நிதியமைச்சர் மாத்திரமே 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் பதவிப்பிரமாணம் செய்துள்ளார். புதிய அரசமைப்பு திருத்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்யாதவர்களுக்கு தமது பதவிகளில் செயற்பட அதிகாரம் இல்லை.

எனவே, கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம், துறைமுக நகர ஒப்பந்தங்கள் உட்பட இந்த அமைச்சரவையால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் அரசமைப்புக்கு முரணானவை- என்றார். (அ)

# நாடு முழுக்க டெங்கு ஒழிப்பு செயல்பாடுகள்

கொழும்பு, ஜன. 05

நாட்டில் நேற்று முதல் விசேட டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, டெங்கு அச்சுறுத்தல் நிலவும் 15 மாவட்டங்களை மையப்படுத்தி இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி, 81 சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் ஆரம்பமாகும் இந்த டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

# இந்து விக்கிரகங்கள் திருட்டு; யாழில் படைச்சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 05

காங்கேசன்துறை பொலிஸ் பிராத்தியத்தில் இராணுவ மற்றும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் இராணுவப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இராணுவப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

டிசெம்பர் 9ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்கும் இடையே தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டன.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள இந்து ஆலயங்களில் திருடப்பட்ட விக்கிரகங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் கொழும்புக்கு விரைந்த உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான குழுவினர் அங்கு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மேலும் 20இற்கு மேற்பட்ட விக்கிரகங்களை மீட்டனர்.

அவற்றை கொள்வனவு செய்த வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் பல இராணுவ மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் இராணுவ பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் 42 வயதுடைய இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு தெல்லிப்பழை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த இராணுவச் சிப்பாயிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# விமர்சனத்தை எதிர்கொள்ள முடியாவிடில் உடனடியாக ஐஸ்கிறீம் விற்க செல்லுங்கள்

## அரசை காட்டமாக சாடுகிறார் சட்டத்தரணி



கொழும்பு, ஜன. 05

"அரசியல்வாதிகளை விமர்சனம் செய்யமுடியாது என்பதற்காக, பொதுமக்களை வேட்டையாட பொலிஸாரைப் பயன்படுத்தக்கூடாது. உங்களால் நகைச்சுவையாக பேச முடியாவிட்டால் அல்லது விமர்சனங்களை எதிர்கொள்ள பிடிக்கவில்லை என்றால், அரசியலில் இருக்கவேண்டாம், ஐஸ்கிரீம் அல்லது இது போன்ற ஏதாவது ஒன்றை விற்கச் செல்லுங்கள். அதுதான் அனைவரையும் மகிழ்விக்கும்."

-இவ்வாறு தெரிவித்துள்ளார் சட்டத்தரணி திஷ்ய வெரகொட.

அரச உயர் அதிகாரிகளை குறிப்பாக ஜனாதிபதியை அவதூறு செய்த குற்றச்சாட்டின் கீழ் பொதுமக்களை துன்புறுத்துவதை நிறுத்துமாறும் அவர் பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டதாக சிங்கள நாளிதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதியை கேலி செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளதாக அந்த செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

ஜனநாயக உலகில், கேலி செய்வது, கிண்டல், மேலும் அரசியல்வாதிகளை நகைச்சுவையாக்குவது அல்லது பொது விமர்சனத்திற்கு உட்படுத்துவது ஏற்கத்தக்கது. சர்வாதிகாரம் அல்லது போலி சர்வாதிகார ஆட்சிகளில் மட்டுமே அரச தலைவரையோ அல்லது பிற செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளையோ கேலி செய்யும் வகையில் மக்கள் கெஸ்டபோ பாணியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் பார்க்கிறோம்.

ஜனாதிபதியை விமர்சிக்கும் நபர்களை கைது செய்து தண்டிக்க பொலிஸார் முயற்சிப்பது இது முதல் தடவையல்ல.

"வாஹலதந்திரி எதிர் பொலிஸ்மா அதிபர் வழக்கில் உயர் நீதிமன்றம் சந்தேகத்துக்கு இடமின்றி, "ஒரு அரச தலைவருக்கு அல்லது அரசாங்கத்துக்கு ஏதேனும் எரிச்சலையோ அல்லது சங்கடத்தையோ ஏற்படுத்துவது, பிரிவு 120இன் கீழ் வழக்குத் தொடர அடிப்படையாகாது. தண்டனைச் சட்டத்தின். பிரிவு 120 இன் சாராம்சம், கேள்விக்குரிய வார்த்தைகள் மக்களை வன்முறை மற்றும் ஒழுங்கீனச் செயல்களைச் செய்யத் தூண்டுகிறதா என்பதுதான், அந்த வார்த்தைகள் அவதூறானவையா இல்லையா என்பது அல்ல. குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் இவ்வாறு மக்களை துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும்-என்றார். (அ)

# சகல நெருக்கடிகளுக்கும் விரைவில் முற்றுப்புள்ளி!

## அமைச்சர் வாசுதேவ



கொழும்பு, ஜன. 05

இன்னும் ஒரு மாத காலத்தில் நாடு முகங்கொடுத்துள்ள அனைத்து பிரச்னை களுக்கும் தீர்வு கிடைக்கும் என நீர் வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"தற்போதைய நிலையில் மக்கள் எதிர்கொண்டுள்ள கஷ்டங்களை நாம் அறிவோம். அவர்கள் விரக்தி அடைந்துள்ளதை ஏற்கிறோம். கொரோனா நிலைமையினால் ஏற்பட்ட இந்த பின்னடைவு விரைவில் சீராகும். மக்களின் நிலை குறித்து கவலையடைகிறோம்.எம்மால் என்ன செய்ய முடியும். அரசின் செயற்பாடுகளை துரிதப் படுத்த வேண்டும். வரிசையில் உள்ள மக்களின் சிலிண்டர்களை தூக்கினால் அவர்களின் சுமை குறையுமா? இந்த பிரச்னைகளுக்கு தந்திரோ பாயமாக சிந்தித்து செயற்பட வேண்டும். இன்னும் ஒரு மாதத்தில் நிலைமை சீராகும் என நம்புகிறோம்." - எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

### சுகாதார தொழிலாளி மீது தாக்குதல்

# வலி. தெற்கு பிரதேச சபை ஊழியர்கள் பகிஷ்கரிப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 05

சுகாதார தொழிலாளி மீது தாக்குதல் நடத்தப் பட்டதைக் கண்டித்தும், அதற்கு உரிய நடவ டிக்கை எடுக்காததைக் கண்டித்தும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஊழியர்களால் நேற்றுக் காலை 9 மணியளவில் பகிஷ்கரிப்பு போராட்டமொன்று மேற் கொள்ளப்பட்டது.

இணுவில் ஆரம்பப் பாட சாலை முன்பாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனு மதி பெறாது நடைபாதையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவரை, நேற்று முன்தி னம் அங்கிருந்து அப்புறப் படுத்த முற்பட்டவேளையில், குறித்த வியாபாரியால் வருமானவரிப் பரிசோதகர், சுகாதாரப் பரிசோதகர் ஆகி யோர் அச்சுறுத்தப்பட்டதோடு, பிரதேச சபையில் கடமையாற் றும் சுகாதார தொழிலாளி மீது தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத் தில் தவிசாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த நபர் கைது செய்யப் பட்டார்.

ஆனாலும் அந்தப் பகுதியில் நேற்றும் தொடர்ந்து வியாபா ரம் நடைபெறுவதாக தெரிவித்து பிரதேச சபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் வியாபா ரம் தொடர்ந்து நடைபெறுவ தாக தெரிவிக்கப்படும் நிலை யில் உடனடியாக அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தெரிவித் தார். (அ-03)

# பிரதமரை பதவி விலக சொல்பவர் துணிவிருந்தால் முன்னே வரட்டும்

### சவால் விடுகிறார் ஆனந்த தேரர்



கொழும்பு, ஜன. 05

**“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகு மாறு அழுத்தம் கொடுக்கும் நபர் யார் என்பது கண்டறியப்படவேண்டும். திரைக்கு பின்னாலிருந்து அறிவிப்புகளை விடுப்பதைவிட துணிவிருந்தால் இது தொடர்பில் நேரடியாக அறிவிக்கப்பட்டும். யார் எத்தகைய அழுத்தங்களை பிரயோகித்தாலும் பிரதமர் செல்லவே கூடாது.”**

-இவ்வாறு அபயராம விகா ரையின் விகாராதிபதி முருத்தெட் டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரைக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேரரை சந்தித்து ஆசி பெற் றார். பிரதமர் அங்கிருந்து சென் றதும் முருத்தெட்டுவே தேரர் ஊடக சந்திப்பொன்றை நடத்தி னார். இதன்போது அவர் கூறியவை வருமாறு:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிவிட்டாரென கதை கட்டுகின்றனர். அவர் இப் போதுதான் என்னை சந்தித்து விட்டு சென்றார். பதவி விலகு மாறு ஜனாதிபதி கூறவில்லை. நாட்டு மக்களும் சொல்ல வில்லை. அப்படியானால் பிரதமரை பதவி விலகுமாறு அழுத்தம் கொடுக்கும் நபர் யார் என்பது கண்டறியப்பட வேண்டும். ஒளிந்திருந்து செயலில் இறங்காது, துணிவிருந்தால் நேரில் வந்து இது பற்றி அறிவிக் குமாறு வலியுறுத்துகின்றேன்.

எவர் எத்தகைய அழுத்தங் களை பிரயோகித்தாலும் மஹிந்த செல்லக்கூடாது. அவர் பதவி விலகுவதாக இருந்தால் எமக்கு அறிவித்துவிட்டே செல்வார். அவர் பதவி விலக வேண்டிய தேவையும் இல்லை. அவர் பதவி விலகினால் நாட்டு மக்கள் அநா தரவாக்கப்படுபவர்-என்றார். (அ)

# மன்னாரில் மூன்று நாட்களில் 2ஆவது கொரோனா மரணம்!

மன்னார், ஜன. 05

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் கடந்த 3 நாள்க ளில் 2 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளநிலையில் மாவட் டத்தில் தற்போதுவரை 36 கொரோனா மரணங்கள் பதி வாகின என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் பணி மனையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் 2021 ஆம் ஆண்டு மொத்தமாக 3161 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இவர்களில் 34 கொரோனா தொற்றாளர்கள் மரணித்துள்ளனர்.

இதேவேளை இவ்வருடம் 2022 ஆம் ஆண்டு முதல் மூன்று நாட்களில் 8 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளனர். அவர்களில் 2 பேர் உயி ரிழந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசெம்பர் மாத ஆரம்ப பகுதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டுள்ள நிலையில் தற்போது அது வீழ்ச் சியடைந்துள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் கடந்த நவம்பர் மாதத்தின் பின் 13 மர ணங்கள் நிகழ்ந்துள்ளன.

இவர்களில் இருவரை தவிர ஏனையவர்கள் கொரோனா தடுப்பூசியின் இரண்டு தடுப் பூசிகளையும் பெற்றுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் கடந்தவர்களாக காணப்படுகின்றனர்.

தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்கள் 2 ஆவது தடுப் பூசி பெற்று 3 மாதங்கள் கடந் திருந்தால் கட்டாயம் மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு முதலாவது தடுப்பூசியை 20 வயதுக்கு மேற் பட்ட சுமார் 83 சத வீதமானவர் களும், 2 ஆவது தடுப் பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட சுமார் 75 சத வீதமானவர்களும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும் இதுவரை 30 வய துக்கு மேற்பட்ட மேலதிக வலு வூட்டல் தடுப்பூசியை மொத் தமாக 30 சதவீதமானவர்கள் மாத்திரமே பெற்றுக்கொண் டுள்ளனர்.

மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் எதிர்வரும் இரண்டு வாரங்கள் அலுவலகங்கள், தொழிற்சாலை கள், சங்கங்கள் போன்றவற் றுக்கு நேரடியாகச் சென்று தடுப் பூசியை வழங்க இருக்கிறோம்.

இவ்வாறான தடுப்பூசி சேவை தேவையானவர்கள் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையுடன் 023 222 2916 என்ற தொலை பேசி இலக்கத்துடன் காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை தொடர்பு கொண்டு பதிவு களை மேற்கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை முசலி பிரதேசச் செயலகத்திலும், எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத் திலும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத் தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிக ரித்துள்ளது. 360 டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

சிறுமி ஒருவர் உயிரிழந்தார். 2017 ஆம் ஆண்டு 543 டெங்கு நோயாளர்கள் அடை யாளம் காணப்பட்டமையை தொடர்ந்து ஏற்பட்ட அடுத்த கட்ட அதிகரிப்பாக காணப் படுகின்றது.

2022 ஆம் ஆண்டு மூன்று நாட்களில் 18 டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர். பேசாலைப் பகுதியில் டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கை கடந்த டிசெம்பர் மாதம் அதிகரித்த நிலையில் காணப்பட்ட போதும் தற்போது குறை வடைந்துள்ளது.

தற்போது மன்னார் நகர பகு தியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. அவற்றை கட்டுப்படுத்தும் நோக்குடன் நேற்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் வியாழக் கிழமை வரை டெங்கு தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படு கின்றது.

இதன்போது பாதுகாப்பு துறையினர், சுகாதாரத்துறை யினர், பிரதேச செயலகம், மாவட்ட செயலக உத்தியோ கத்தர்கள் மக்களின் வீடுகளை தரிசிப்பதோடு, டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்கள் அடை யாளம் காண்டு அழிப்பது அல்லது அகற்ற, சுத்தப்படுத் தும் நடவடிக்கைகளை மேற் கொள்ள உள்ளனர்.

குறிப்பாக நீர் சேமித்து வைக்கும் தொட்டிகளில் குறித்த டெங்கு நுளம்புகள் வளரும் சாத்தியம் உள்ளதால் பொதுமக்கள் அவற்றை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். தேவை யற்ற தொட்டிகளை அகற்ற வேண்டும்-என்றார். (அ)

# சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட இலங்கை முடிவு!



கொழும்பு, ஜன. 05

இலங்கை எதிர்கொண்டு வரும் பொருளாதார நெருக்க டிகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

அத்துடன், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகளுடனும், இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் ஜப் பான் போன்ற இலங்கைக்கு ஏற் கனவே உதவிகளை வழங்கும் நாடுகளுடனும் கலந்துரையா டப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சரவை அமைச்சர்கள் அடங்கிய குழு வொன்றும் நியமிக்கப்படும் எனவும் நிதியமைச்சர் தெரி வித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவி பெறுவதை வாசுதேவ நாணயக்கார மற்றும் பந்துல குணவர்தன உள்ளிட்ட பல அமைச்சர்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத் திடம் சென்றால் அந்த அமைப்பு கடுமையான நிபந்தனைகளை விதிக்கும். இது மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளை பாதிக்கும் என அவர்கள் தெரி வித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)



கனடாவில் வசிக்கும் பிரபாகரன் டிலுஷனின் 6 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த வாரம் கொக்குவில் பெரிய புலம் மகா வித்தியாலய மாணவர்கள் 58 பேருக்கு கற்றல் உபகர ணங்கள் பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. பூமணி அம்மா அறக்கட்டளையால் அதன் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகர பிரதி மேயர் து.ஈசன், ஆலோசகர் இ.மயில் வாகனம், அதிபர்.ந.பரமேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண் டனர். (அ)

# கொலையாளியை உடன் கைது செய்!

## கிளிநொச்சியில் சடலத்தை வீதியில் வைத்து போராட்டம்!

கிளிநொச்சி, ஜன. 05

குற்றவாளிகளை கைது செய்து குற்றச் செயல்களை கட்டுப்படுத்துமாறு கோரி கிளிநொச்சியில் சடலத்தை வீதியில் வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. பொலிஸாரின் வாக்குறுதியை அடுத்து அந்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.



இந்த போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் ஏ-9 வீதியை மறித்து இடம்பெற்றது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியில் புத்தாண்டு தினமான முதலாம் திகதி இரவு கூரிய ஆயுதத்தால் குத்தி நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த இளைஞனின் கொலைக்கு நீதி கோரி பரந்தன் வர்த்தகர்கள் நேற்று முன் தினம் முழுகடையடைப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சம்பவத்தில் குணரட்ணம் கார்த்தீபன் எனும் 24 வயதுடைய இளைஞர் படுகொலை செய்யப்பட்டதோடு மேலுமொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் கைது செய்யப்படாத நிலையில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் குறித்த இளைஞனின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றதை தொடர்ந்து சடலம் மக்கள் பேரணியுடன் பரந்தன் சந்திவரை சென்றது.

தொடர்ந்து அந்தப் பகுதியில் ஏ-9 வீதியை மறித்து இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் என பலரும் இணைந்து வீதி மறியல் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது ஏ-9 வீதிய ஊடான போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்யும் வகையில் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தபோதிலும், போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து போக்குவரத்துக்காக மாற்று வழிகள் பொலிஸாரினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கட்டுப்படுத்துவதற்காக பெருமளவான பொலிஸார் வரவழைக்கப்பட்டபோதிலும் அவர்களை கட்டுப்படுத்த முடியாது போனது.

இந்த நிலையில் பொலிஸ் உயரதிகாரிகள் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடனும், குடும்பத்தினரிடமும் கலந்துரையாடினார். குற்றவாளிகளை கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ஏற்கனவே ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அவர்களிடம் தெரிவித்தார்.

மக்களின் கோரிக்கைக்கு அமைவாக பரந்தன் சந்தியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைப்பதாகவும், ஏனையவர்களை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

குறித்த விடயங்களை உள்ளடக்கிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் ஒப்பத்துடன் கடிதம் ஒன்றும் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது. அந்த விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்து பொலிஸ் அத்தியட்சகர் கையெழுத்திட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கடிதம் ஒன்றைக் கையளித்தார்.

இதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் உறவுகள் மற்றும் பொது மக்கள் அவ்விடத்தை விட்டு கலைந்து சென்று உயிரிழந்தவரின் இறுதி கிரியைகளில் கலந்துகொண்டனர்.

இந்த போராட்டம் சுமார் 30 நிமிடங்கள் ஏ-9 வீதியை மறித்து இடம்பெற்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (அ)

## ‘ரிக்ரொக்’ பதிவால் தகராறு; 17 வயது இளைஞர் கொலை!

கொழும்பு, ஜன. 05

‘ரிக்ரொக்’ பதிவு தொடர்பில் ஏற்பட்ட தகராறில் 17 வயது இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியிலேயே இந்த இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞர் என தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மாதம்பிட்டிய ஒழுங்கை பகுதியில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் தனது நண்பர்கள் இருவருடன் மாதம்பிட்டிய வீதியிலுள்ள ஹேன முல்ல ரன்திய உயன அடுக்கு மாடி குடியிருப்புக்கு சென்று கொண்டிருந்தபோது, மற்றுமொரு குழுவினரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ரிக்ரொக் காணொலி தொடர்பான தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

சந்தேகநபர்கள் அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளனர். அவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## யாழ்ப்பாணத்தில் மூன்றாவது மலேரியா நோயாளி கண்டறிவு

யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்.போதனா வைத்தியசாலையில் மலேரியா நோயாளி ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு பிளாஸ்மோடியம் பல்சிபரம் என்ற மூளை மலேரியாவை ஏற்படுத்தும் கிருமித் தொற்று இனங்காணப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நபர் தென்னாபிரிக்காவில் இருந்து அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தவர். கடந்த ஒரு மாதத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் இனங்காணப்பட்ட மூன்றாவது மலேரியா நோயாளி இவராவார்.

எனவே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மலேரியா நோய் நுளம்பின் மூலம் பரவலைத் தடுக்க நுளம்பு பெருகும் இடங்களை இல்லாது ஒழித்தல் மிகவும் அவசியமான கடமையாகும் - என்றார். (அ-03)

## இந்தியாவிடமிருந்து 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதி

கொழும்பு, ஜன. 05

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 32 மற்றும் 35 இருக்கைகள் கொண்ட 500 புதிய பஸ்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



இதற்காக, மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இந்தியாவின் அசோக் லேலண்ட் மூலம் இந்த பஸ்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (அ)

## தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டும்

கொழும்பு, ஜன. 05

அரச ஊழியர்களைப் போன்று தனியார் துறையினருக்கும் சட்டத்தின் ஊடாக சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழில் சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பதால் மட்டும் எதிர்பார்த்த முடிவுகளை பெற முடியாது என பொதுச் சேவைகள் ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவைக் கூட்டி, சட்டக் கட்டமைப்பின் மூலம் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பொறிமுறையை உருவாக்கும் பொறுப்பு தொழிற்துறை அமைச்சுக்கு இருப்பதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன் தினம் அறிவித்தார்.

மேலும் தனியார் துறையினருக்கான சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு தொழிற்துறை அமைச்சருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். (அ)

## 4 கட்சிகளுடன் கூட்டணி அமைக்க ஜே.வி.பி. மறுப்பு

கொழும்பு, ஜன. 05

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிப் மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் நாம் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம்.” - என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரதான கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் தரப்புகள் மக்களின் நம்பிக்கையை முழுமையாக இழந்துள்ளன. இதனால் தேசிய மக்கள் சக்தியை நோக்கி மக்கள் அணிதிரண்டு வருகின்றனர்.



மக்கள் நம்பிக்கையை இழந்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசிலிருந்து வெளியேறவுள்ள அணிகளை நாம் இணைத்துக் கொள்ளமாட்டோம். அவர்களை மக்கள் வெறுக்கின்றனர். அதனால் தான் எம்மை நோக்கி வருகின்றனர். மக்கள் விரும்பாததை நாம் செய்யமாட்டோம். அவ்வாறு செய்தால் மக்கள் அலை திசை திரும்பும்.

மேற்படி கட்சிகளிலுள்ள முற்போக்கு சிந்தனையாளர்கள் எம்முடன் இணையலாம். அதற்கான அழைப்பை விடுக்கின்றோம். வருபவர்கள் தொடர்பில் உரிய பரிசீலனையின் பின்னரே இணைவு இடம்பெறும் - என்றார். (அ)

# கலைப்பீடங்களும் ஆய்வுகளின் மேம்பாடும்

கௌஷல்யா பெரேரா

**ஆக்கபூர்வமான, மும்முரமான, சமூகத்திற்குப் பொருத்தமான கலைப் பிரிவு ஆய்வுகளை உருவாக்க வேண்டுமெனில் நாம் இப்போதே அதற்காகச் செயல்பட வேண்டும். ஆய்வுகளை முடக்கும் தொன்மையான, நீண்ட நிர்வாக மற்றும் நிதி ரீதியான செயல்முறைகள் சீர்திருத்தப்பட வேண்டும். அரச பல்கலைக்கழகங்களின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்கான பாதை இவ்வளவு நீண்டதாக இருத்தல் அவசியமல்ல.**

அரச பல்கலைக்கழகங்கள், குறிப்பாக மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் அல்லது கலைப்பீடங்கள் பல வருடங்களாக ஆய்வுகளில் ஈடுபடாதுள்ளன என்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டாகும். நாம் எத்தனை ஆய்வுகளில் ஈடுபடுகின்றோம்? அதன் தரம் என்ன? விஞ்ஞானப் பிரிவுகளுக்கு எம்மால் ஈடுகொடுக்க முடியாதிருப்பது ஏன்? ஏன் எமது ஆய்வுகள் வெளியிடப்படுவதில்லை? போன்ற கேள்விகள் மிகச் சரியானவை. அவற்றுக்கான பதில்களும் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

**ஆய்வுகளின் மேம்பாடு**

அரச பல்கலைக்கழகங்கள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் இரண்டு விடயங்கள் தேவைப்படுகின்றன. முதலாவது நிதி, இரண்டாவது நிதி ஒதுக்கும்போது ஆய்வுகளுக்கான முன்னுரிமை. உலகில் ஆய்வுகளுக்குப் பெயர்போன பல்கலைக்கழகங்களில் வருடாந்தம் ஆய்வுகளுக்கு மட்டுமே சுமார் 100 கோடி டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அவ்வாறான பல்கலைக்கழகங்களுக்குப் போதியளவு நிதி உள்ளது என்பது உண்மையே. அத்தோடு அவை ஆராய்ச்சிப் பல்கலைக் கழகங்கள். எம்மைப் போன்ற கற்பித்தல் பல்கலைக்கழகங்கள் அல்ல என்ற கருத்தும் சரியானது. எனினும் இங்கு எமக்கும் அவர்களுக்குமுள்ள முக்கிய வேறுபாடு, அவர்கள் ஆய்வுகளுக்கு முன்னுரிமை வழங்குவதாகும். அவர்கள் அதற்குத் தேவையான நேரம், இடம், மற்றும் பணத்தை ஒதுக்குகின்றார்கள். ஆய்வுக்கான உபகரணங்கள், உதவியாளர்களுக்கான சம்பளங்கள், போக்குவரத்துக்கான சலுகைகள், மானியங்கள் போன்றவற்றை வழங்குகின்றார்கள். அவர்களது நிர்வாகச் சுமையும் அரசாங்கத்தின் புறக்கணிப்பும் குறைவானவை. அதோடு ஆய்வுக்காகக் கணிசமானளவு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களோ வறுமையில் உள்ளன. திறைசேரி ஊடாகவே நிதியைப் பெறுகின்றன. 4 பிரிவுகள், 11 துறைகள், மற்றும் 3000 மாணவர்களைக் கொண்ட எமது பீடத்திற்கு 2021 இல் ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதி 10லட்சம் ரூபாயிலும் குறைவானது எனக் கேள்வியுற்றோம். திறைசேரி நிதிகள் ஆய்வுகளுக்கான செலவுகளை ஈடுசெய்யமாட்டா. ஆகவே அய்வுகளுக்கு நிதி தேவைப்படின் பல்கலைக்கழகங்கள் அதனை உழைத்துத் தான் பெற வேண்டும்!

அரச பல்கலைக்கழகங்களில் கட்டணம் அறவிடும் கற்கை நெறிகள், வெளிப் பட்டங்கள் போன்ற வருமானம் ஈட்டும் திட்டங்களின் தோற்றத்துக்கான காரணங்களில் இதுவும் ஒன்று. உள்ளக மாணவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களே இவ்வாறான கற்கை நெறிகளையும் முன்னெடுக்கின்றனர். ஒரு தொழிற்சாலையானது குறித்த ஒரு வேலைக்குத் தேவையான தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினரையே வேலைக்கமர்த்துகின்றது எனக் கருதுவோம். இங்கு வேலைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படாததோடு சில வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாது போகுமல்லவா? இவ்வுதாரணம் எமது அரச பல்கலைக்கழகங்களுக்கும் அதன் ஆய்வுகளுக்கும் நன்று பொருந்துகின்றது.

பல்கலைக்கழகங்களில் நிதிப் பற்றாக்குறை காரணமாக ஆய்வுக்கான செலவுகள் அவற்றின் வருமானம் ஈட்டும் சக்தியில் தங்க வேண்டியுள்ளது. NCAS போன்ற வேறு சில அரச தாபனங்களால் நிதி பெறப்படுவதுண்டு. உலக வங்கியின் கடன் திட்டங்களும் நிதிக்கான ஒரு மூலமாகக் காணப்படுகின்றன. எனினும் இக்கடன் திட்டங்களோடு வேறு பிரச்னைகள் எழுவதுண்டு. உதாரணமாக உலக வங்கியின் நிபந்தனைகள், நிறுவனம் அல்லது ஆய்வாளரின் இலக்குகளுக்குப் பொருந்தாத பகுதிகள் மீது அதிக கவனம் செலுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**நிதி பெறப்பட்டபோதும் ஆய்வு மேற்கொள்ளப்படாமை**

தேசிய விஞ்ஞான மன்றமானது (NSF) அதன் மானியம் வழங்கும் திட்டத்தில் முன்னுரிமை பெறும் துறைகளில் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்களை இவ்வருடம் உள்ளடக்கவில்லை. இலங்கையின் முன்னணி ஆய்வு நிறுவனங்களிலொன்று கலைப் பிரிவை எவ்வாறு நோக்குகின்றது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகவுள்ளது. இங்கு எமது துறை கடந்த சில தசாப்தங்களில் எதிர்கொண்டுள்ள வேறு சில சவால்களையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

அரச பல்கலைக்கழகங்களின் ஆய்வுகள் 'தேசிய அபிவிருத்திக்குப்' பொருத்தமானதாக இருக்க வேண்டும். அதாவது விஞ்ஞானம், மருத்துவம் அல்லது தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுகள் கலைப் பிரிவின் ஆய்வுகளிலும் பார்க்கப் பொருத்தமானவை என்ற கருத்து இங்கு வெளிப்படுகின்றது. எனினும் 'பொருத்தம்' என்பதன் அர்த்தம் வேறுபடக்கூடியது. உதாரணமாக, ஒரு வரலாற்று நிகழ்வு, சிறுபான்மை மொழி, ஒரு நோய் தொடர்பாக சமூகத்தின் விளக்கம் போன்றவை தொடர்பான ஆய்வுகள் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையானவை அல்லவா? ஆகவே 'பொருத்தம்' என்பதை நிவர்த்தி செய்ய ஆய்வுகள் குறித்த அரசாங்கத்தின் ஆர்வங்களுக்கேற்பவோ, பொதுவாக சமூக அபிவிருத்தி பற்றியோ இருக்க வேண்டிய தேவை இல்லை அல்லவா?

இங்கு இன்னொரு சிக்கலாக இருப்பது அதிகாரபூர்வமான எமது நிர்வாகத்தின் தொன்மையாகும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உரைகளை நிகழ்த்தக் கல்வியாளர்களால் குறுகிய கால அவகாசத்தில் செல்ல முடியாதுள்ளது. இதன் காரணம் பிரயாணம் மற்றும் நிதிகளுக்கான அனுமதியைப் பெறுவதற்கு கணக்கான நேரம் தேவைப்படுகின்றமையாகும். நிர்வாகத்தினூடான செயன்முறைகள் நீண்ட காலம் எடுப்பதால் ஆய்வாளர்கள் தமது பல்கலைக்கழகங்களிலிருந்து மானியங்களைப் பெறத் தயங்குகின்றனர். அரச பல்கலைக் கழகங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவை. அதனைப் பெற வருடங்கள் செல்வதால் வெளிநாட்டு ஆய்வு நிறுவனங்களுடனான பெறுமதியான தொடர்புகள் பல இழக்கப்படுகின்றன.

சக மதிப்பாய்வு செய்யப்பட்ட, சர்வதேச அங்கீகாரமுள்ள இதழ்களிலேயே ஆய்வுகள் வெளியிடப்பட வேண்டும் என்ற நிபந்தனையை நிறுவனங்கள் கொண்டிருப்பதன் மூலம் கல்வியாளர்கள் உயர்வான தரங்களை எட்ட ஊக்குவிக்கப்படுகின்றனர். எனினும் h-சுட்டி போன்ற அளவுகோல்கள் பிரச்னைக்குரியவை. இச் சுட்டியானது ஒரு ஆய்வின் பெறுமதியை மேற்கோள்களின் எண்ணிக்கை அடிப்படையில் மதிப்பிடுகின்றது. இது ஒப்பீட்டளவில் குறுகிய மற்றும் துரிதமாக வெளியிடப்படக் கூடிய மருத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் ஆய்வுகளுக்குப் பக்கச்சார்பாக அமைகின்றது. கலைப் பிரிவின் கட்டுரைகள் 8000- 10 000 சொற்கள் கொண்டிருப்பதோடு அதனை வெளியிட ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் தேவைப்படுகின்றது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற இதழ்களில் வருடாந்தம் மூன்றே ஆய்வுகளை வெளியிடும் சமூகவியலாளர் அத்துறையில் சிறந்த ஒருவராகக் கருதப்படுகின்றார். எனினும் h-சுட்டி அல்லது கல்வி ஊக்குவிப்புத் திட்டத்திற்கேற்ப விஞ்ஞானம், மருத்துவம் அல்லது தகவல் தொழில்நுட்பத்திலும் பார்க்க அது பெறுமதி குறைந்ததாகவே மதிப்பிடப்படுகின்றது.

ஆய்வு என்பது தொடர்பான சீரான கருத்தொன்றைத் தாபிப்பதும் சிக்கலான விடயமாகும். ஒரு உளவியலாளர், தாவரவியலாளர், தொற்று நோயியல் நிபுணர், மற்றும் இசையமைப்பாளரின் ஆய்வுகள் ஒரே வடிவத்தைக் கொண்டிருப்பதில்லை. ஒரு நாடகத்தின் விமர்சனத்தையோ, ஒரு புதிய பல்லியினத்தின் கண்டுபிடிப்பையோ, ஒரு வரலாற்றுக் கலைப்பொருள் பற்றிய பகுப்பாய்வையோ ஒரே அளவுகோல்களாலோ ஒரே நபர்களாலோ மதிப்பிட முடியாதல்லவா. ஆகவே துறைகளுக்கேற்றவாறு அளவுகோல்களும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**ஆய்வுக்கான சூழலின் மாற்றம்**

இவ்வாறான மதிப்பீடுகளும் "பொருத்தம்" பற்றிய கருத்துக்களும் சில பின்விளைவுகளைக் கொண்டுள்ளன. கலைப் பிரிவானது பெறுமதி குறைவானதாகக் கருதப்படுவதால் அதற்குக் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்படுகின்றது. இதனால் வளங்களைப் பெறும் தன்மை, பயிற்சிகளின் மும்முரம், முதுகலைப் பட்டத்திற்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை அணுகுவதற்கான சந்தர்ப்பங்கள், சர்வதேச கல்வித் தரவுத்தளங்களை உபயோகிக்கும் தன்மை போன்றவை குறைவடைகின்றன. இது ஏற்கனவே



எமது பல்கலைக்கழகங்களில் சிந்தனை மற்றும் ஆக்கத்திற்கான பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது.

ஆக்கபூர்வமான, மும்முரமான, சமூகத்திற்குப் பொருத்தமான கலைப் பிரிவு ஆய்வுகளை உருவாக்க வேண்டுமெனில் நாம் இப்போதே அதற்காகச் செயற்பட வேண்டும். ஆய்வுகளை முடக்கும் தொன்மையான, நீண்ட நிர்வாக மற்றும் நிதி ரீதியான செயன்முறைகள் சீர்திருத்தப்பட வேண்டும். அரச பல்கலைக்கழகங்களின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்கான பாதை இவ்வளவு நீண்டதாக இருத்தல் அவசியமல்ல. தற்போது தலைதூக்கி வரும் தேசியவாத மற்றும் நவ தாராளவாதக் கருத்தியல்களை எதிர்க்கேள்வி கேட்க வேண்டும். தேசியவாதக் கருத்தியல்கள் இனப் பாகுபாட்டை அதிகரிக்கும் ஆய்வுகளையும், நவ தாராளவாதம் ஆய்வுகள் முன்னெடுப்பதன் தீவிரத்தைக் குறைப்பதையுமே ஊக்குவிக்கின்றன. அடுத்த ஐம்பது வருடங்களில் நல்ல ஆய்வுகளை நாம் உருவாக்க விரும்பினால் இவ்வாறான கருத்தியல்கள் முதலில் எதிர்க்கப்பட வேண்டும்.

**எழுத்தாளர் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பிரிவில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்**

மொழிபெயர்ப்பு:
**கோபிகா சிவகுமார்**



# தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற சுன்னாகம் பொதுநூலகம்

**நூலகங்கள் என்பது அலுமாரிகளில், ராக்கைகளில் புத்தகங்களை அடுக்கி வைக்கும் இடமல்ல, வாசிப்பையும் அதனோடான சமூக முன்னேற்றத்தையும் நடைமுறைப்படுத்தும் இடமாக இருக்கவேண்டும். நூலகங்களுக்கு வரும் வாசகர்களுக்காக மட்டும் இயங்காமல், வாசகர்களை நூலகங்களை நோக்கி ஈர்க்கும் பணியையும் செய்யவேண்டும்.**

**குலசிங்கம் வசீகரன்**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை ஏற்பாடு செய்துள்ள தேசிய வாசிப்பு மாத விருது வழங்கும் விழா கடந்த 29ஆம் திகதி யன்று தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கை சமூகம் மத்தியில் புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் 2004 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அதே நேரத்தில், தேசிய நூலக ஆவண வாக்கல் சேவைகள் சபையின் வழிகாட்டுதலின் கீழ், வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலைகள், பொது மற்றும் சிறப்பு நூலகங்கள் மூலம் நாடு முழுவதும் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அவற்றில், தேசிய வாசிப்பு மாதச் செயற்திட்டத்தை மிகச் சிறந்த முறையில் செயல்படுத்திய நூலகங்களை மதிப்பிட்டு ஆண்டுதோறும் விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது.

தேசிய வாசிப்பு மாதத்திற்கான சிறந்த செயற்திட்டங்களை நிகழ்த்திய பின்வரும் நூலகங்கள் இலங்கையில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றன.

**முதலாம் இடம்** - யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகம்

**இரண்டாம் இடம்** - கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பிரதேச சபையின் ஹந்தல பொது நூலகம்

**மூன்றாம் இடம்** - யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின்அளவெட்டி பொது நூலகம்.

2019ஆம் ஆண்டுக்குரிய சிறந்த நூலகமாக தேசிய ரீதியாக முதலாவது இடத்தை பெற்ற சுன்னாகம் பொதுநூலக மானது,

- 2009ஆம் வருடத்தில் வடக்கு மாகாண மட்டத்தில் சிறந்த நூலகமாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் விருது,
- 2007, 2009, 2010, 2011, 2012, 2013, 2015, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் தேசிய வாசிப்பு மதத்திற்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்கள்,
- வடக்கு மாகாணத்தில் அதிசிறந்த நூலகத்திற்கான முதலாம் இடம்,
- தேசிய ரீதியில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் ஜனாதிபதி விருதிற்கு தெரிவு செய்யப்பட்டு தேசத்தின் சிறந்த நூலகங்களுக்கான 2013 ஆம் ஆண்டிற்கான “சுவர்ணபுரவர” விருது, மற்றும் 50,000 ரூபாய் அன்பளிப்புத் தொகை,
- 2018ஆம் ஆண்டில் தேசிய வாசிப்பு மாதத்தில் மட்டுமன்றி ஆண்டு முழுவதும் சிறப்பாக செயற்பட்டமைக்காக தேசிய வாசிப்பு மாத 2019ஆம் ஆண்டு விருது வழங்கும் விழாவில் “விசேட விருது”, ஆகியவற்றை பெற்றுள்ளது.

உக்கிரசிங்கனின் ஆட்சியில் மயிலணி என்ற பெயரை கொண்ட ஊர் தான் இன்றைய சுன்னாகம். பண்டைய இலங்கையில் தமிழ் வளர்த்த ஊர்களில் முக்கிய ஊராக கருதப்படும் சுன்னாகம் பல தமிழறிஞர்களை உலகுக்கு தந்துள்ளது.

அம்பத்தியாறு ஆண்டுகால வரலாறு கொண்ட இந்த சுன்னாகம் பொது நூலகமானது சுன்னாகம் பட்டண சபையினால் 01 ஐப்பசி 1964ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் பட்டண சபையின் தலைவராக செனட்டர் பொ.நாகலிங்கம் அவர்கள் கடமையாற்றினார்கள். யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை பிரதான வீதியில் ஆயுர்வேத வைத்தியர் தம்பையாவின் இல்லத்தில் சில காலமும், பின்னர் பண்டிதர் சிவசம்புவின் இல்லத்தில் சில காலமும் தற்காலிகமாக நூலகம் இயங்கி வந்தது.

நூலகத்திற்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட நீதிபதியாக இருந்த வி.மா.குமாரசாமியின் 3 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டது. பொதுமக்களிடமிருந்து நன் கொடைகளைப்பெற்று நூலகத்திற்கான அமைப்பப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நூலகத்திற்கான கட்டட வரைபடத்தினை கொழும்பு கட்டடக் கலைஞர் பெரேரா வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

18 தை 1973இல் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முதல்வராக இருந்த சுப்பிரமணியம் அவர்களால் நூலகத்திற்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1974ஆம் வருடம் ஆடி மாதமளவில் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் திரு டி. அல்விஸ் அவர்களால் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நூலகத்தில் பல்வேறு சேவைகள் வாசகர்களுக்கும் மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. புத்தகம் இரவல் வழங்கல் பிரிவு, உசாத்துணைப் பிரிவு, சிறுவர் நூலகப் பிரிவு, பத்திரிகை மற்றும் சஞ்சிகைப் பிரிவு, கல்விப் பிரிவு ஆகிய பிரிவுகள் ஆரம்பம் முதல் சிறப்பாக இயங்கி வருகின்றன.



இந்த நூலகத்தின் நூல்சேர்ப்பு இடாப்பின்படி இங்கு தற்போது 26261 நூல்கள் உள்ளன. இதில் யுத்தம் மற்றும் பழுதடைதல் வகையில் இழக்கப்பட்ட 3789 நூல்கள் போக 22472 நூல்கள் தற்போது உள்ளன. இவற்றில் 16521 தமிழ் நூல்கள், 5786 ஆங்கில நூல்கள், 165 சிங்கள நூல்கள் மொழிரீதியாக வகைப்படுத்தப்பட்டு இங்கு உள்ளன.

பிரதேச பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் இணுவில் மகிழ்ச்சி முதியோர் இல்லம் ஆகியவற்றுக்கு நடமாடும் நூலகசேவையினையும் இந்த நூலகம் வழங்கிவருகிறது.

சுன்னாகம் மத்திய பேருந்து நிலையத்தில் தினசரிப் பத்திரிகைகள் இந்த நூலகத்தினால் வைக்கப்படுகின்றது. முக்கியமாக 03.10.2019 முதல் தினசரிப் பத்திரிகை பேருந்து நிலையத்தில் பயணிகளின் வாசிப்புக்காக வைக்கப்படுகிறது, இதன் மூலம் பேருந்துக்காக காத்திருக்கும் நேரத்தில் பத்திரிகை செய்திகளை வாசிக்க வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கிறது.

“நூல் கொடுப்போம் நூலகம் அமைப்போம்” என்னும் தொனிப்பொருளில் முன்பள்ளிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றில் நூலகங்களை அமைக்க வழிகாட்டல்களையும் குறித்த எண்ணிக்கையிலான புத்தகங்களையும் சுன்னாகம் நூலகம் வழங்கி வருகிறது.

இந்த நூலகத்தின் சிறப்பு சேகரப் பகுதியில் பழைய பருவ இதழ்கள், அரிய நூல்கள், பத்திரிகை வெட்டுத்துணுக்குகள், பிரதேச தொகுப்புகள், நினைவு மலர்கள், பத்திரிகை சேகரிப்புகள், மரபுரிமை பற்றிய சேகரிப்புகள், புகைப் படங்கள் என்பன சேகரிக்கப்பட்டு பேணப்படுகின்றன.

நூலகத்தினால் வெளியிடப்படும் வெள்ளிமலை சஞ்சிகையானது 2007ஆம் ஆண்டில் தொடங்கி 2020இல் 15ஆவது இதழ் வெளிவந்திருக்கிறது, சிறப்பு மலராக பொன்விழா மலர் 2014 இல் வெளிவந்திருக்கிறது.

முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடு வாரத்தில் ஒரு நாள் நூலகத்தின் சிறுவர் பகுதியில் நடை பெறுவதோடு ஓவிய வகுப்பும் நடைபெறுகிறது. இங்கு ஓவியம் கற்கும் மாணவர்கள் நூலகத்தின் சுற்றுச்சுவர்களில் ஓவியங்களை வரைந்துள்ளார்கள்.

வருடாவருடம் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல நிகழ்ச்சிகளை இங்கு ஒழுங்கு செய்கிறார்கள், குறிப்பாக சிறுவர்களுக்கான போட்டிகளை ஒழுங்குசெய்து பரிசில்கள் வழங்கப்படுகிறது. நூல் வெளியீடுகள் மற்றும் நூல்கள் சஞ்சிகைகள் பற்றிய கலந்தாய்வுகள் இங்கு கிராமமாக ஒழுங்குசெய்யப் படுகிறது.

புத்தகங்கள், வாசிப்பு என்பவற்றை தாண்டி சூழல் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. நெகிழிப்பாவனையை கட்டுப்படுத்தல், வீட்டுத்தோட்ட முயற்சிகளை ஊக்குவித்தல், இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு, டெங்கு நோயை கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களை சுன்னாகம் பொது நூலகம் முன்னெடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் பகுதியை விரிவுபடுத்தும் நோக்கில் பிரித்தானியாவில் வாழும் மூத்த நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் புக்ஸ் எப்ரோட் (Books Abroad) மூலம் ஏராளமான சிறுவர் ஆங்கில நூல்களை சுன்னாகம் நூலகத்துக்கும் கடந்த ஆண்டு வழங்கியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் சிறுவர் பகுதியில் விளையாட்டுப் பொருள்களுக்கான பிரிவொன்றை உருவாக்கி ஒருதொகை வெளிநாட்டு சிறுவர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறுவர்கள் நூலகத்துக்கு வருவதை ஊக்குவிக்க உதவியிருக்கிறார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த முறையில் பராமரிக்கப்படும் கழிப்பறையும், முதலுதவிப் பெட்டியும் இந்த நூலகத்தில் காணக் கூடியதாக இருந்தது.

மாற்றுத்திறனாளிகள் நூலகத்துக்குள் இலகுவாக வந்து தமது தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய வசதியும் இந்த நூலகத்தின் வாயில்களில் அமைக்கப்படுமானால் சிறப்பாக இருக்கும்.

இவ்வாறாக பல்வேறு சேவைகளையும் வசதிகளையும் கொண்ட இந்த நூலகத்தின் இன்றிய நிலைக்கு ஒவ்வொரு காலகட்டங்களிலும் இந்த நூலகத்தின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்து சேவைசெய்த நூலகர்கள் முக்கிய காரண கர்த்தாக்கள்.

தற்போது இந்த நூலகத்தை நிர்வகிக்கும் நூலகர் திருமதி ஜெயலட்சுமி சுதர்சன், வாசிப்புத்தளத்தில் தம்மோடு இணைத்தவர்களை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை இயங்கு தளத்துக்கு மேலேறி செல்ல வழி அமைத்துக்கொடுக்கும் பண்பினை இயல்பாகவே கொண்டவர், இந்த நூலகத்தை மேலும் வளர்த்து, ஒரு நூலகம் சமூகத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்காளிக்க முடியும் என்ற சிந்தனையோடு இயங்கி வரும் ஒருவர். இவர் 2018இல் இந்த நூலகத்தின் நூலகராக நியமனம் பெற்றிருந்தார், இந்த மூன்று வருடகாலப்பகுதியில் சுன்னாகம் பொதுநூலகத்தில் இவர் முன்னெடுத்த பல்வேறு முயற்சிகளை பற்றிய தகவல்களை கடந்தகால நூலக செயற்பாட்டு அறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

நூலகங்கள் என்பது அலுமாரிகளில், ராக்கைகளில் புத்தகங்களை அடுக்கிவைக்கும் இடமல்ல, வாசிப்பையும் அதனோடான சமூக முன்னேற்றத்தையும் நடைமுறைப்படுத்தும் இடமாக இருக்கவேண்டும். நூலகங்களுக்கு வரும் வாசகர்களுக்காக மட்டும் இயங்காமல், வாசகர்களை நூலகங்களை நோக்கி ஈர்க்கும் பணியையும் செய்யவேண்டும், தற்போதைய காலச்சூழலில் வாசகர்களை நோக்கி நகரும் நூலகங்களாக இருப்பதும் அவசியமாகிறது. ∎

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


**21)** அலைமகள் வித்தியாலய மாணவர்களின் ஒரு நாள் உபயோகத்திற்கு 500*l* நீர் தேவை. 5000*l* நீர் கொள்ளக் கூடிய நீர்த்தாங்கி பாடசாலையில் உள்ளது எனில், இந்நீரை எத்தனை முழு நாட்களுக்குப் பயன்படுத்த முடியும்?

.......................................................................................................

**22)** கூட்டுக. $\frac{1}{2} + \frac{2}{5} =$ ..........................

**23)** ஒலுசல நிறுவனத்தில் கடந்த மாதம் 17 ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் முறையே 3077, 4416, 5929, 2960 மாத்திரைகள் விற்கப்பட்டன. இறுதி மூன்று தினங்களிலும் விற்கப்பட்ட மாத்திரைகளின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

**24)** 

3cm


ஒத்த அளவுடைய ஐந்து கீலங்கள் இவ்வாறு அடுக்கப்பட்டன எனில்,

i. இதன் சுற்றளவு யாது?

.......................................................................................................


ii. பரப்பளவு யாது?

.......................................................................................................

**25)** 


இங்கு தரப்பட்டுள்ள பென்சிலின் நீளத்தை மில்லிமீற்றரில் எழுதுக?

.......................................................................................................

**26)** 


இத் திண்மவுருவில் இருக்கும்

i. செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

ii. ஓரங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................


**27)** 

இத்தளவடிவத்தின் இரு மடங்கு சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட தளவடிவத்தின் பெயர் என்ன?

.......................................................................................................

**28)** வைத்தியசாலையில் கடமையாற்றும் குமார், குறித்த தினத்தில் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் நோய் நிர்ணய அட்டைகளைப் பார்வையிட்டார்.
இல 637 தொடக்கம் 717 வரை அடுக்கப்பட்டிருந்தன. அன்று சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

**29)** 


| உணவு வகை | உண்போர் எண்ணிக்கை |
|---|---|
| இடியப்பம் | ...................... |
| சோறு | 40 |
| தோசை | 40 |
| இட்டலி | 35 |
| பாண் | 15 |

i. வரைபிற்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

ii. அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

(15 x 2 = 30 புள்ளிகள்)

✧ **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**30)** நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
1) துத்திரி, ஆடையொட்டி, புலிநகம் 2) இறப்பர், காசித்தும்பை, கடல்மாங்காய்
3) அச்சி, ஒட்டுப்புல், தேங்காய் 4) தேங்காய், கடல்மாங்காய், தாமரைவித்து

**31)** விசர்க்கடி நோயை (நீர்வெறுப்பு) ஏற்படுத்தும் பிராணிகள்
1) நாய், பன்றி 2) பூனை, யானை 3) நரி, பூனை 4) குரங்கு, காகம்

**32)** சுவட்டில் இடம்பெறும் குழுநிகழ்ச்சி
1) எறிபந்து 2) அஞ்சலோட்டம் 3) சட்டவேலி தாண்டல் 4) சம்மட்டி வீசுதல்

**33)** நுண்ணியதாகத் தனது கூட்டை ஆக்கும் வல்லமையுள்ள பிராணி

1)  2)  3)  4) 

## விடைகள்

21. 10
22. $\frac{9}{10}$
23. 13305
24. i) 16cm ii) $15cm^2$
25. 55mm
26. i) 24 ii) 12
27. செவ்வகம்
28. 81
29. i) 20 ii) பொருத்தமாக வரைக

30. 4 31. 3 32. 2 33. 1

---

**கல்வி tv CHANNEL-1**

**05.01.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**கல்வி tv CHANNEL - 2**

**05.01.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# திண்டாடிய தினேஷ்!

கொழும்பு, ஜன. 05

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதில் வழங்குவதை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தவிர்த்தார்.

அரசாங்கத்தினால் இவ்வாறான தீர்மானங்களை முன்னெடுக்க முடியுமா?, பதவி நீக்கம் தொடர்பாக அமைச்சர்கள் அமைதி காத்தது ஏன்?, அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு பயமா? என ஊடகவியலாளர்கள் சரமாரியாக கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, இந்த விடயத்தில் தான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் இந்த விடயத்தில் அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்படவில்லை என்றும் கூறினார்.

மேலும் சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் குறித்த கேள்விக்கு அவரே பதிலளிக்கவேண்டும் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (அ)

# ஆசிரியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளம் இம்மாதம் முதல் கிட்டும்

கொழும்பு, ஜன. 05

ஆசிரியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை இந்த மாதம் முதல் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, அதிகரிக்கப்பட்ட சம்பளம் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அமைச் சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதேநேரம், சமுர்த்திப் பயனாளிகள் உட்பட பல்வேறு குழுக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# நீர்த்தேக்கங்களில் உயரும் நீர்மட்டம்

## மகாவலி கங்கையை அண்மித்து வாழும் மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 05

மகாவலி கங்கையைப் பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் செயல்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

சில நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில், அதிலிருந்து வெளியேறும் நீரானது மகாவலி கங்கையுடன் இணைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ரீ. அபேசிறிவர்த்தன தெரிவித்தார். இதனால் மகாவலி கங்கையின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

இதுதவிர, கலாஓயா, மட்டக்களப்பு - முந்தனையாறு ஆகியவற்றின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு ஜனாதிபதி சிறப்பாக செய்வார்

## ஊவா மாகாண ஆளுநர் நம்பிக்கை



கொழும்பு, ஜன. 05

**“ஆங்காங்கே கதை சொல்லித் திரிய வேண்டாம், அரசியல் பேசி நேரத்தை வீணடிக்கவேண்டாம், மேலும் மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்வார்.” என ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.**

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் ஊவா மாகாண சபை அதிகாரிகள் சமய நிகழ்வுகளை நடத்தி, செயல்திறன் மிக்க அரச சேவைக்கான உறுதிமொழி வழங்கி 2022 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஊவா மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021ஆம் ஆண்டில் கோவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். என்றாலும் பொருளாதார ரீதியில் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டோம். சுற்றுலாத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்தது. சுற்றுலா விடுதிகளில் பணிபுரிந்த பல இலட்சம் பேருக்குத் தொழில் இல்லாமல்போனது. இதுபோன்ற பல பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசு முகங்கொடுக்க நேர்ந்தாலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை அரசாங்கம் ஒருநாள் சரி தாமதிக்காமல் வழங்கியது.

அதேபோன்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கும் அரசாங்கம் பிரதேச சபைகளின் ஊடாக உதவிகளை வழங்கியது. பாடசாலைகள் மூடப்பட்டன, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இவை அனைத்துக்கு மத்தியிலும் நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அரசாங்கம் தொடராக முன்னெடுத்தது.

ஜனாதிபதியின் பிரதிநிதி என்ற வகையில் ஊவா மாகாணத்தில் உங்களால் முன்னெடுக்கப்படும் அரச சேவையை நாம் மிகவும் மதிக்கின்றோம். திறமையான, வேலை செய்ய விருப்பமான அரச ஊழியர்கள் எம்முடன் இணைந்திருப்பது எமக்கு பெரும் சக்தியாகவும், சந்தோசமாகவும் உள்ளது.

பொதுமக்கள் வழங்கும் வரியிலிருந்து நாம் சம்பளம் பெறுகிறோம், அதற்கு நாம் நேர்மையானவர்களாக நாம் இருக்கவேண்டும். அரச ஊழியர்கள் என்ற வகையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு எமது அயராத ஒத்துழைப்பை வழங்க இந்த வருடமும் நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

அலுவலக நேரங்களில் ஆங்காங்கே கதை சொல்லித் திரிய வேண்டாம், அரசியல் பேசி நேரத்தை வீணடிக்கவேண்டாம், மேலும் மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதியாக கோட்டாபய இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்வார். எமக்கு எமது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும், எமது நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எமக்கு நம்பிக்கை வைக்கமுடியும்.

அந்நிய செலாவணி குறித்து எமக்குப் பிரச்னைகள் காணப்படுகின்றன. டொலர் பற்றாக்குறை காணப்படுகிறது. அவை அனைத்தையும் பரிபூரணப்படுத்திகொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்-என்றார். (அ)

# மாகாண தேர்தல் குறித்து கலந்துரையாடவில்லை

கொழும்பு, ஜன. 05

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு எந்தவொரு நாடும் அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார். (அ)

# நெருக்கடியிலிருந்து நாட்டை காக்க சுதந்திரக் கட்சி தயார்!

கொழும்பு, ஜன. 05

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை காப்பாற்றுவதே தமது பொறுப்பு என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சி பல வருடங்களாக மக்களுக்கும் நாட்டுக்கும் சேவையாற்றியுள்ள காரணத்தினாலேயே மக்கள் எம் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

எனவே சரியான தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுக்க வேண்டும்.

சவால்களுக்கு மத்தியிலும் நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் சுதந்திரக் கட்சி தொடர்ந்து பணியாற்றும்-என்றார். (அ)

# புதிய நாணயங்களை அச்சிடாது சலுகைகளை வழங்கவேண்டும்!

## அரசிடம் கோருகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 05

பொதுமக்களுக்கு நியாயமான சலுகைகளை வழங்குவது அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

இருப்பினும் புதிதாக நாணயங்களை அச்சிடாமல் இந்த சலுகைகள் பொதுமக்களுக்கு



வழங்கப்படும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

அவ்வாறு செய்யாவிட்டால் அதன் விளைவுகளை எம்மால் அனுபவிக்க முடியாது என்றும் ஹர்ஷண ராஜகருண தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விசேட பொருளாதார நிவாரணப் பொதியொன்றை அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் அவர் இதனை கூறியுள்ளார். (அ)

# வாரியபொல பிரதேச சபை தலைவர் பதவி நீக்கப்பட்டார்

கொழும்பு, ஜன. 05

வாரியபொல பிரதேச சபையின் தலைவர் டி. எம். திலகரத்ன பண்டார திஸாநாயக்க அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னகொடவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்தப் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார்.

அவருக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வாரியபொல பிரதேச சபையின் தலைவர் திலகரத்ன பண்டார திஸநாயக்க ஜனவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். (அ)

# ஈரான் சுட்டு வீழ்த்திய விமானத்தில் உயிரிழந்த ஆறு பேருக்கு நட்டஈடு!

## ஒன்ராறியோ மாகாண உயர்நீதிமன்று உத்தரவு

ஒன்ராறியோ, ஜன. 05

ஈரானில் 2020ஆம் ஆண்டு பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் இறந்த ஆறு பேரின் குடும்பங்களுக்கு 10.7 கோடி கனடா டொலர்களை வட்டியுடன் சேர்த்து இழப்பீடாக வழங்க வேண்டும் என கனடா - ஒன்ரா றியோ மாகாண உயர் நீதிமன்றம் ஈரானுக்கு உத்தரவிட்டுள்ளது.

இறந்தவர்களின் மனைவிமார், சகோதரர்கள், பிள்ளைகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு இந்த இழப்பீட்டை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் ஈரானிடம் இருந்து எப்படி இழப்பீட்டுத் தொகை வசூலிக்கப்படும் என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

கடந்த 2020 ஆம் ஆண்டு தெஹ்ரான் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் பி.எஸ் 752 என்ற உக்ரைன் இன்ரர்நஷனல் எயார்லைன்ஸ் பயணிகள் விமானம் ஏவுகணைத் தாக்குதல் மூலம் வீழ்த்தப்பட்டது. இதில் விமானத்தில் இருந்த 176 பேரும் உயிரிழந்தனர்.

பின்னர் அமெரிக்காவின் ஏவுகணை எனக் கருதி விமானத்தை தவறுதலாக சுட்டு வீழ்த்திவிட்டதாக ஈரான் மன்னிப்பு கோரியது.

சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் இருந்தவர்களின் 55 பேர் கனடாவைச் சேர்ந்தவர்களாவர். அவர்களில் 35 பேர் கனடாவில் நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள்.

இந்நிலையில் இந்த சம்பவத்துக்கு காரணமான ஈரானுக்கு எதிராக உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஒன்ராறியோ உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியானது. அத் தீர்ப்பிலேயே இறந்த ஆறு பேரின் குடும்பங்களுக்கு 10.7 கோடி கனடா டொலர்களை வட்டியுடன் சேர்த்து இழப்பீடாக வழங்க வேண் டும் என ஒன்ராறியோ மாகாண உயர் நீதிமன்றம் ஈரானுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஈரான் தரப்பு வாதங்களை முன்வைக்காமல், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும். (அ)

# சிரியாவில் ஐ. எஸ். பயங்கரவாதிகளின் திடீர்த் தாக்குதலில் 9 படையினர் பலி!

டமஸ்கஸ், ஜன. 05

சிரிய இராணுவ வாகன தொடரணி மீது ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் பதுங்கியிருந்து நடத்திய திடீர் தாக்குதலில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் 15 பேர் காயமடைந்தனர். டெய்ர் எஸோர் மாகாணத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இராணுவத்தினர் சென்ற பஸ் மீது சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்திய தீவிரவாதிகள், ரொக் கட்டுக்களையும் வீசித் தாக்குதல் நடத்தினர்.

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் கடந்த 2019ஆம் ஆண்டு முழுமையாக ஒடுக்கப்பட்டு, அவர்களின் கட் டுப்பாட்டில் இருந்த அனைத்து பகுதிகளும் மீட்கப்பட்டன. எனினும் சமீப காலமாக சிரியா வின் தெற்கு மற்றும் மத்திய பகுதியில் ஐ. எஸ். பயங்கரவாதிகளின் கை மீண்டும் ஓங்கி வருகிறது. அவர்கள் அங்கு இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரை குறிவைத்து தொடர்ச்சியாக பயங்கரவாத தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கொலை முயற்சி தாக்குதலில் இருந்து தப்பினார் ஹெய்ட்டி பிரதமர் ஹென்றி!




போர்ட் ஓ பிரின்ஸ், ஜன. 05

கரீபியன் நாடான ஹெய்ட்டி பிரதமர் ஏரியல் ஹென்றியைக் கொலை செய்யும் நோக்குடன் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்து அவர் தப்பியுள்ளதாக பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

218 ஆவது சுதந்திர தின விழாவை ஒட்டி வடக்கு நகரமான கோனைவ்ஸில் உள்ள ஒரு தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் பங்கேற்றிருந்தவேளை, அவரை இலக்குவைத்து ஆயுததாரிகள் சரமாரி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய வேளை பிரதமர் ஏரியல் ஹென்றி மற்றும் அவரது குழுவினர் வாகனத்தை நோக்கி ஓடிச் சென்று பதுங்கிக் கொண்டதை சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள காணொலி காட்சிகளில் காண முடிகிறது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரதமர் ஹென்றியைக் கொலை செய்யும் நோக்குடன் தாக்குதல் நடத்தியவர்களை தேடிக் கைது செய்யும் நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டதில் இருந்து ஹெய்ட்டியில் அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அரச தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் பிரதமர் மீதான தாக்குதல் பாதுகாப்பு குறித்த கவலைகளை மேலும் அதிகரித்துள்ளது. (அ)

# டில்லி முதல்வர் கெஜ்ரிவாலுக்கு கொரோனா!

புதுடில்லி, ஜன. 05

டில்லி முதல்வர் கெஜ்ரிவாலுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இது குறித்து டில்லி முதல்வர் வெளியிட்ட பதிவில், எனக்கு கொரோனா தொற்று உறுதியாகி இருப்பதால் நான் தனிமைப்படுத்தி கொண்டேன். என்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் சோதனை செய்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்-என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவரது அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கும் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கும் கொரோனா தாக்கம் இருந்ததன் காரணமாக தற்போது அவர் தனிமையில் உள்ளார். (அ)

# பாரிஸில் ஐரோப்பிய ஒன்றிய கொடி; போர்க்கொடி தூக்கினர் வலதுசாரிகள்

## எதிர்ப்பை அடுத்து அரசு அகற்றியது



பாரிஸ், ஜன. 05

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை அடுத்த ஆறு மாதங்களுக்கு பிரான்ஸ் பொறுப்பேற்பதைக் குறிக்கும் முகமாக பாரிஸில் உள்ள வெற்றி வளைவில் ஒன்றியத்தின் பிரமாண்டமான கொடி ஒன்று கடந்த வெள்ளியன்று பறக்கவிடப்பட்டது.

ஈபிள் கோபுரம் உட்பட நகரின் முக்கிய கட்டடங்கள் ஐரோப்பிய வர்ணத்தில் ஒளியூட்டப்பட்டும் இருந்தன.

பாரிஸ் நகரில் ஒரு டசினுக்கு மேற்பட்ட வீதிகள் ஒன்றாகச் சந்திக்கின்ற முக்கிய இடத்தில் போர் வீரர்களைக் குறிக்கின்ற நினைவுச் சின்னமாகிய வெற்றி வளைவு அமைந்திருக்கிறது. வழக்கமாக நாட்டின் தேசியக் கொடி பறக்கின்ற வளைவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடி கட்டப்பட்டதற்கு எதிராகத் தீவிர வலதுசாரிக் கட்சிகள் போர்க் கொடி தூக்கியதால் அரசியல் மட்டத்தில் அது ஒரு சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியது.

முக்கிய நினைவுச் சின்னமாகிய வெற்றி வளைவில் தேசியக்கொடி அகற்றப்பட்டமை 'நாட்டின் அடையாளங்கள் மீது நடத்தப்பட்ட ஒரு தாக்குதல்' என்று தீவிர வலதுசாரித் தலைவி மரின் லு பென் கடுமையாகக் கண்டித்துப் பதிவு ஒன்றை வெளியிட்டார். அதற்கு மறுப்புத் தெரிவித்த ஐரோப்பிய விவகார அமைச்சர்,

தேசியக்கொடி அகற்றப்பட்டமை 'தற்காலிகமானது' என்று விளக்கமளித்தார்.

அதிபர் தேர்தலில் போட்டியிடுகின்ற முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளராகிய மரின் லூ பென், கொடி விவகாரத்தில் சட்ட நடவடிக்கையை நாடி அதனை நாட்டின் நிர்வாக விடயங்களைக் கையாளுகின்ற உயர் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்போவதாக அறிவித்தார்.

மற்றொரு வலதுசாரி வேட்பாளராகிய வலெரி பெக்ரெஸ் அம்மையாரும் அரசின் இந்தச் செயலுக்கு எதிர்ப்பு வெளியிட்டார்.

"ஐரோப்பாவுக்குத் தலைமை ஏற்பது சரி. அதற்காகப் பிரான்ஸின் அடையாளங்கள் அழிக்கப்படக்கூடாது" என்று அவர் ருவிட்டர் பதிவில்குறிப்பிட்டார். சுயேச்சை வேட்பாளர் எரிக் செமூர் அரசின் செயலை 'ஓர் அட்டூழியம்' என்று வர்ணித்தார்.

கொடி விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியதால் வெற்றி வளைவில் கட்டப்பட்ட ஐரோப்பிய ஒன்றியக் கொடியை அரசு சனிக்கிழமை இரவோடு இரவாக அந்தஇடத்தில் இருந்து அகற்றிவிட்டது. அழுத்தங்களுக்கு அரசு அடிபணிந்து விட்டது என்று தெரிவித்துக் கொடி அகற்றப்பட்டமையை வெற்றியாக வெளிப்படுத்திய மரின் லூ பென், 'மக்ரோன் அகற்றப்பட்டார்' என்ற அர்த்தத்தில் பதிவிட்டிருக்கிறார். ஆனால் முன்னர் திட்டமிட்டபடியே கொடி அகற்றப்பட்டது. அழுத்தங்களால் அல்ல என்றுஅரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தை மேலும் வலுப்படுத்த விரும்பும் கொள்கைகளோடு அதிபர் தேர்தலை எதிர்கொள்கின்றார் மக்ரோன்.

ஆனால் தேசபக்தி என்ற பேரில் மக்களது உணர்ச்சிகளைத் தூண்டி அதன் மூலம் ஆதாய அரசியலை முன்னெடுக்கின்ற தீவிர வலதுசாரிகளது எழுச்சி தேர்தலில் அவருக்குப் பெரும் சவாலாக மாறியிருக்கிறது என்று சில அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (அ)

# பங்களாதேஷுடனான டெஸ்ட் நியூசிலாந்து அணி தடுமாற்றம்!




மவுன்கவுனி, ஜன. 05

பங்களாதேஷுக்கு எதிராக சொந்த மண்ணில் நடக்கும் டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

நியூசிலாந்துக்கு சென்றுள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. சனிக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் பங்களாதேஷ் அணி 401 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்திருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

யசிர் அலி 11, ஹசன் மிராஸ் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தா டிய அவர்கள் சிறிது நேரமே நீடித்தனர். யசிர் அலி 26, மிராஸ் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த தஸ்கின் அஹமட் 5, சொரிபுல் இஸ்லாம் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கவே பங்களாதேஷ் அணி 176.2 ஓவர்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 458 ஓட்டங்களைப் பெற்றது.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் போல்ட் 4, நீல் வோக்னர் 3, ரிம் சௌதி 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

130 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது நியூசிலாந்து.

ரொம் லதாம், வில் யங் இணை தொடக்கம் கொடுத்தது. ரொம் லதாம் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மறு முனையில் நிலைத்து ஆடினார் வில் யங். அடுத்து வந்த கொன்வே 13 ஓட்டங்களுடன் வெளியேற, அரைச்சதம் கடந்த வில் யங் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நான்காவது வீரராகக் களமிறங்கிய ரோஸ் ரெய்லர் நிலைத்தாடியபோதும், அடுத்துக் களமிறங்கிய ஹென்றி நிக்கோல்ஸ், ரொம் புளூண்டெல் ஆகியோர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வீழ்ந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 63 ஓவர்களை எதிர்கொண்ட நியூசிலாந்து 5 விக்கெட்கள் இழப்புக்கு 147 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரோஸ் ரெய்லர் 37, ரச்சின் ரவீந்திர 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக் காமல் உள்ளனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில் எபடோற் ஹூசைன் 4 விக்கெட்களையும், தஸ்கின் அஹமட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

பங்களாதேஷ் அணியை விட 17 ஓட்டங்கள் மட்டுமே நியூசிலாந்து முன்னிலை பெற்றுள்ளது. போட்டியின் இறுதிநாளான இன்று வேகமாக மீதமுள்ள விக்கெட்களை பங்களாதேஷ் வீழ்த்தினால், அந்த அணி வரலாற்று வெற்றியைப் பெறும். (ஐ)



பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான மகாராணியின் செய்தி தாங்கிய கோல் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தது. இந்தக் கோலை இலங்கை பெண்கள் கூடைப்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவியான தர்ஜினி சிவலிங்கம், இலங்கை கிரிக்கெட் அணிகளின் முன்னாள் தலைவர்களான குமார் சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, மலையேற்ற வீராங்கனை ஜெயந்தி குருஉதும்பல ஆகியோர் நேற்று பார்வையிட்டனர்

# அஹமதாபாத்தின் பயிற்றுநராக நெஹ்ரா


புதுடில்லி, ஜன. 05

2022ஆம் ஆண்டு ஐ. பி. எல். இருபது - 20 சீசனில் புதிதாகப் பங்கேற்க இருக்கும் அஹமதாபாத் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் அஷிஸ் நெஹ்ரா நியமிக்கப்பவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த அணியின் நிர்வாக இயக்குநராக இங்கிலாந்து அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் விக்ரம் சோலங்கி நியமிக்கப்படவுள்ளார்.



அஷிஸ் நெஹ்ரா இதற்கு முன் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




# களம் திரும்பினார் ஜப்பானின் ஒசாகா!

மெல்பர்ன், ஜன. 05

உலகின் முதல் நிலை வீராங்கனைகளில் ஒருவரான ஜப்பானின் நயோமி ஒசாகா நான்கு மாத இடைவெளியின் பின்னர் ஆடுகளத்துக்கு திரும்பியுள்ளார்.

நடப்பு அவுஸ்திரேலிய ஓப்பன் சம்பியனான ஒசாகா செப்ரெம்பரில் நடந்த அமெரிக்க கிராண்ட்ஸ்லம் போட்டி தோல்வியுடன் ரென்னிஸிலிருந்து இடைவெளியை ஏற்படுத்தினார்.

மெல்பர்னில் நடக்கும் பெண்களுக்கான ரென்னிஸ் சங்கத்தின் போட்டியில் ஒசாகா பிரான்ஸின் கோனெட்டை நேற்று எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் ஒசாகா 6 -4, 3 - 6, 6 - 3 என்ற செற் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார். (ஐ)

# 202க்கு சுருண்டது இந்தியா; தென்னாபிரிக்கா நிதானம்!

ஜொகன்னஸ்பேர்க், ஜன. 05

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா முதல் இனிங்ஸில் 202 ஓட்டங்களுக்கு சுருண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் தென்னா பிரிக்க அணி நிதானமாக ஆடி வருகின்றது.

தென்னாபிரிக்கா சென் றுள்ள இந்திய அணி 3 போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொட ரில் தற்போது விளையாடி வருகின்றது. ஜொகன்னஸ்பேர்க் கில் நடக்கும் முதல் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமா னது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அணித் தலைவர் கே. எல். ராகுல், மயங்க் அகர்வால் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை நிதானமாக துடுப்பெடுத்தாடிய நிலையில், மயங்க் அகர்வால் 26 ஓட்டங்ஷகளுடன் ஜான்சனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஆனால், அடுத்துக் களமிறங்கிய புஜாரா 3, ரஹானே 0 என ஆட்டமிழந்தனர். மறு முனையில் கே. எல். ராகுல் போராடவே அவருக்கு துணையாக மறுமுனையில் நிலைக்க முயன்றார் ஹனுமவிகாரி. ஆனாலும், அவரால் அதிகநேரம் தாக்குப்பிடிக்க முடிய வில்லை. 20 ஓட்டங்களைப் பெற்று அவர் ஆட்ட மிழக்கவே, சிறிது நேரத்தி லேயே 50 ஓட்டங்களுடன் கே. எல். ராகுலும் ஆட்டமிழந்தார்.

எனினும், 7ஆவது விக் கெட்டுக்காக களமிறங்கிய அஸ்வின் நிதானம் காட்டவே மறு முனையில் எவரும் நிலைக்கவில்லை. தாகூர் 0, முஹமட் ஷமி 9, சிராஜ் 1 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

63.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த இந்திய அணி 202 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ஜான்சன் 4 விக்கெட்களையும், ரபாடா, ஒலிவர் ஆகியோர் தலா 3 விக் கெட்களையும் கைப்பற்றினர்.



பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்காவுக்கு டீன் எல்கர் அய்டன் மார்க்ரம் தொடக்கம் கொடுத்தனர். மார்க்ரம் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து வந்த கீகன் பீற்றர்சன் நிலைத்து ஆடினார். எல்கர் 120 பந்துகளை சந்தித்து 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 118 பந்துகளை சந்தித்த பீற்றர்சன் 62 ஓட்டங்களுடன் வெளியேறினார். வான் டேர் டுசென் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்கா தடுமாறியது.

நேற்று மதிய போசனத்துக் காக ஆட்டம் நிறுத்தப்பட்ட போது தென்னாபிரிக்க அணி 44.4 ஓவர்கள் நிறைவில் 102 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்களை இழந்திருந்தது. (ஐ)

# இலங்கை - சீன நட்புறவில் இனி நேர்மை இருக்காது!

## அந்நாட்டு ஜனாதிபதிக்கு விஜயதாஸ கடிதம்



**கொழும்பு, ஜன. 05**

**இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்புறவு இனி நேர்மையானதும் உண்மையானதுமாக இருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

45 விடயங்களை சுட்டிக் காட்டி சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கிற்கு எழுதியுள்ள கடிதத் திலேயே விஜயதாஸ இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரி வித்துள்ள முக்கியமான விட யங்கள் வருமாறு:

உலக வல்லரசாக மாறுவதற் கான சீனாவின் பயணத்தில் இலங்கையும் போர்க்களங்க ளில் ஒன்றாக மாறியுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையமே 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை யில் அதிக வட்டி விகிதத்தில் இருந்து சீனாவுக்கு பலனளித்த ஒரேயொரு திட்டம்.

ஏனைய திட்டங்கள் அனைத்தும் வெறும் வீண்செல வுகள். சீனா இலங்கையை பாரிய கடன் வலையில் சிக்க வைத்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஜனநாயக முறைமையின் கீழ் நீக்கப்படும். இதன்போது கடந்த 15 வருட காலத்தில் சர் வதேச நாடுகள் மற்றும் நிறுவ னங்களுடன் செய்துகொள்ளப் பட்ட உடன்படிக்கைகளை மீண்டும் ஆராயப்படும்.

இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் மக்களின் கருத்துக் கணிப்புடனேயே நடை பெறும். இதன்போது ஊழல் மோசடிகள் காணப்படும் அனைத்து உடன்படிக்கை களும் இரத்துச் செய்யப்படும்- என்றார். (அ)

# ஜனாதிபதி நினைத்தால் என்னையும் நீக்கலாம்!

## சுசிலின் பதவி பறிப்பு குறித்து டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 05

"ஜனாதிபதி நினைத்தால் என்னையும் பதவி நீக்கம் செய் யலாம். அதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது."-என்று அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது,

"அரசை விமர்சித்ததால் இராஜாங்க அமைச்சுப் பதவி யில் இருந்து சுசில் பிரேம ஜயந்த நீக்கப்பட்டுள்ளார். அரசை விமர்சிப்பதற்கு ஆளுங்கட்சியில் உள்ளவர்க ளுக்கு தடையா" என எழுப் பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"நான் இந்த ஊடக சந்திப்புக்கு வரும்வழியில்தான் அது தொடர்பில் அறிந்தேன். அரசமைப்பின் பிரகாரம் தனக் குள்ள அதிகாரத்தைப் பயன்ப டுத்தியே ஜனாதிபதி அந்த முடிவை எடுத்துள்ளார். இது கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. சுசில் பிரேமஜயந்த எனது நண்பர். நானும் கவலை அடை கின்றேன். ஜனாதிபதி நினைத் தால் என்னையும் நீக்கலாம்.

அரசை விமர்சித்ததால்தான் அவர் நீக்கப்பட்டார் எனக் கூறப்படுவதை ஏற்கமுடியாது. தற்போதைய அமைச்சரவையில் சுதந்திரம் இருக்கின்றது. கம் மன்பில போன்றவர்கள் நீதிமன் றத்தைக்கூட நாடியுள்ளனர்."- என்றார். (அ)

# வவுனியாவில் உதவித்திட்டம் வழங்கல்

வவுனியா, ஜன. 05

வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம் மற் றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த பொது அமைப்புக்கள் மற்றும் விளை யாட்டு கழகங்களுக்கு உபகர ணங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயல கத்தின் திட்டமிடல் பிரிவின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதி தியாக கலந்துகொண்ட பாரா ளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் உதவிப் பொருட்களை கையளித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், இலங்கை உதைபந் தாட்ட சங்கத்தின் உபபொரு ளாளர் அ. நாகராஜன், மற்றும் விளையாட்டுக்கழகத்தினர்,திட் டமிடல் பிரிவின் உத்தியோ கத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# திடீரெனத் திறக்கப்பட்டது கார் கதவு மோதுண்டு படுகாயமுற்றவர் மரணம்

## யாழ். மாவட்ட செயலகம் அருகே சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்.மாவட்ட செயலகத் துக்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் பிரபல அளவையியல் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூ ரியின் ஓய்வு பெற்ற ஆசிரிய ரான வேலுப்பிள்ளை யுகபா லசிங்கம் என்பவரே உயிரி ழந்தார்

நேற்று முன்தினம் இரவு மாவட்ட செயலகத்தை அண் மித்த வீதியில் பதில் நீதிவான் ஒருவரின் கார் வீதியில் நிறுத் தப்பட்டிருந்த நிலையில் சடுதியாக அந்தக் காரின் கதவு திறக்கப்பட்டது.

இதன்போது அந்த வீதியால் பயணித்த ஆசிரியர் திறக்கப் பட்ட காரின் கதவு மீது மோதி வீதியில் விழுந்துள்ளார். இந்த நேரத்தில், பின்னால் வந்த பஸ் அவர் மீது மோதியுள்ளது.

ஆசிரியர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து இடம்பெற்றவுடன் காயம் அடைந்தவரை வைத்தி யசாலையில் உடனடியாக சேர்க்க விபத்துடன் சம்பந் தப்பட்டவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என உயிரிழந்த ஆசிரியரின் உறவினர்கள் குற்றம்சாட்டி யுள்ளனர்.

அதேவேளை, குறித்த பதில் நீதிவானும், அவரது சாரதியும் நேற்றே பொலிஸ் நிலையத்துக் குச் சென்று வாக்குமூலம் வழங் கியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ள நிலையில், பதில் நீதிவானின் சாரதியும், பஸ் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-03)


# மரண அறிவித்தல்

மலர்வு 24 - 01 - 1936



உதிர்வு 23 - 12 - 2021

## இராமலிங்கம் நாகநாதபிள்ளை மருதையினார்

(இளைப்பாறிய பட்டய கணக்காளர்)

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாக கொண்டவருமான இராமலிங்கம் நாகநாதபிள்ளை மருதையினார் அவர்கள் 23.12.2021 சனிக் கிழமையன்று லண்டனில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலை யுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னார் நெடுந்தீவு காலஞ்சென்ற நாகநாதபிள்ளை - தெய் வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான குமாரசாமி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்பு கணவரும், நிமலன், குணாளனின் பாச மிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான யாதவராயர், நாகமுத்து மற்றும் பார்வதிப்பிள்ளை, காலஞ்சென்ற மங்களம் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் குண நாயகம், சொர்ணம்மா, புண்ணியமூர்த்தி, லிங்கநாயகம், கோபால கிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரேணுகா, நிருபா வின் அன்பு மாமனாரும், மேனகா, பூர்ணிமா, கரன், ஈஸ்வரியின் அருமை பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.01.2022 ஞாயிற்றுகிழமை லண்டனில் நடைபெறும்.

கிரியைகள்: காலை 11:00 மணி
Oshwal Ekta Cente, 366A Stag Lane,
Kingsbury, London, NW9 9AA

தகனம்: பி.ப. 02:00 மணி
Hendon Crematorium, Holders Hill Road
London, NW7 1NB

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
00 44 7803152078
kunalan@gmail.com

தகவல்:
குடும்பத்தினர்.



எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# காளிமாதா ஜோதிட நிலையம்





இந்திய பிரபல்யமான பாரம்பரிய

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

## யாரை விலக்கி...

உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த எம். பி. அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் கூறுகையில்,

அனைத்து கட்சிகளும் இணைந்து தயாரித்த வரைவை தமிழ் அரசுக் கட்சி முற்றாக நிராகரிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார். எனினும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா இன்னும் ஓரிரு நாட்கள் பிந்தினாலும்கூட இறுதி வரைவை தயாரித்து அனைவரும் கையொப்பமிட்டு இந்தியப்பிரதமருக்கு அனுப்புவோம் என்று உறுதிமொழி அளித்துள்ளார்.

எனவே, இந்த விடயத்தில் யார் கையொப்பமிடுவது, யாரை தவிர்ப்பது, யார் விலகிக்கொள்வார்கள் என்பது இன்னும் ஓரிரு நாட்களில் தெரியவரும். ஆயினும், தமிழீழ விடுதலை இயக்கம் எடுத்த முயற்சியை ஒருபோதும் கைவிடப் போவதில்லை. இந்த முயற்சியில் இருந்து யாராவது பின்வாங்க விரும்பினால் அல்லது கையொப்பமிட மறுத்தால் அது யாராக இருந்தாலும் அவர்களை விலக்கி வைத்துவிட்டு இந்த வரைவை கையொப்பம் இட்டு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வோம்.

வார்த்தை பிரயோகங்களை சாட்டாக வைத்துக்கொண்டு தமிழ் அரசுக் கட்சி ரெலோ எடுத்த முடிவுக்குப் பின்னால் நாங்கள் செல்வதா என்ற சிறுபிள்ளைத் தனமான அல்லது தமிழ் மக்களை ஏமாற்ற நினைக்கின்ற இந்த செயல்பாட்டை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் விளைவுதான் 13ஆவது திருத்தம். ஆகவே, ஒன்றுக்கொன்று முடிச்சுப்போட்டு அது வேறு இதுவேறு, தலைப்பு வேறு, வார்த்தை பிரயோகங்கள் வேறு என்று சொல்வது சிறுபிள்ளைத்தனமானது. இந்தியாவின் பங்களிப்பில்லாமல் எமது அரசியல் ரீதியான பிரச்னைக்கு நிச்சயமாக நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை. அதை உணர்ந்து அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் செயல்பட வேண்டும்.

அந்தவகையிலேயே இந்த முயற்சியை எடுத்துள்ளோம் இது நிச்சயம் வெற்றி பெறும். இந்த விடயத்தில் எந்த ஆலோசனையையும் இந்தியாவிடமிருந்து நாம் பெறவில்லை. இந்தியா எமக்கு எந்தவித அழுத்தங்களையும் வழங்கவில்லை. ஆனால், நாம் பாதிக்கப்பட்ட இனம் என்றவகையில் கடந்தகாலங்களில் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு வழியிலோ எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள் என்ற ரீதியில், அவர்களால் கொண்டுவரப்பட்ட சர்வதேச ஒப்பந்தம் என்ற ரீதியில் அழுத்தங்கள் என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் விடுதலைக்காக செய்கின்ற பெரும் கைங்கரியமாக இதனை பார்க்கிறோம் - என்றார். (ஐ)

## வட, கிழக்கு...

2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 7 கட்சிகள் சந்தித்துப் பேசின. இந்தக் கூட்டத்தில் ஆரம்பத்தில் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்கவில்லை. எனினும், பின்னர் நடந்த கூட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியும் பங்கேற்றது.

இறுதியாக 11 கட்சிகள் கொழும்பில் கூடி வரைவு ஒன்றைத் தயாரித்தன. அந்த வரைவின் விடயங்களுடன் - குறிப்பாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் விடயத்துடன் ஒன்றுபட முஸ்லிம் கட்சிகள் பின்னடித்த நிலையில், தொடர்ந்து வேறு காரணங்களை காட்டி மனோ கணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்கு கூட்டணியும் இழுபறிப்பட்டது.

இதைத் தொடர்ந்து சில கட்சிகள் கூடி சந்தித்து நடத்திய கலந்துரையாடல்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன. அத்துடன், புதிய நகல் ஒன்றும் தயாரிக்கப் பட்டது. ஆனால், அவற்றை தமிழ் அரசுக் கட்சி நிராகரித்த நிலையில் இப்போது 21ஆம் திகதி தயாரித்த கூட்டு வரைவில் கையொப்பமிடத் தமிழ் கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் விளைவாக வந்த 13ஆம் திருத்தச் சட்டத்தையும் முழுமையாக நடைமுறைப் படுத்தக் கோருவதில் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ் கட்சிகள் ஓரணியில் நிற்கின்றன. இதனால், மலையக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களை நேரில் சந்தித்துப் பேசி அவர்களுக்கு நிலைமையை விளக்கிய பின்னர் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ்க் கட்சிகள் மட்டும் இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிடுவது என்று ஏற்பாட்டுக் கட்சிகள் தற்போது திட்டமிட்டுள்ளன என்றும் மேலும் அறிய வருகின்றது.

இதேவேளை, 21ஆம் திகதி தயாரிக்கப்பட்ட கூட்டு வரைவில் கையொப்பமிடுவதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுதியாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முன்தினமும் உறுதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமலை...

மலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் ஏற்கனவே இந்தியாவுடன் உள்ள மூன்று உடன்படிக்கைகளை ஆராய்ந்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரப் பேச்சுக்களை அடுத்து குறிப்பிட்ட எண்ணெய் குதங்களை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான இணக்கம் காணப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது. இந்த யோசனையின்படி, 24 எண்ணெய்க் குதங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப் படும். ஏற்கனவே லங்கா ஐ. ஓ. சிக்கு வழங்கப்பட்டுள்ள 14 எண்ணெய்க் குதங்களும் அவற்றின் நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் குத்தகைக்கு வழங்கப்படும்.

திருகோணமலை பெற்றோலியம் ரேர்மினல் என்ற பெயரிலான நிறுவனத்தின் மூலமாக ஏனைய 16 எண்ணெய்க் குதங்களும் பராமரிக்கப்படும். இதில் 51 வீதமான பங்குகள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கொண்டிருக்கும். இதேவேளையில், 49 வீதமான பங்குகளை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

## அரசை சாடிய...

கூறியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுசில் பிரேமஜயந்த, நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாடுக்கு அரசாங்கமே காரணமென நேரடியாக அரசாங்கத்தை விமர்சித்திருந்தார்.

அத்தோடு, நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு என்பன மக்களை வெகுவாக பாதித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் மரக்கறிகள் விலை அதிகரிப்பு, எரிவாயு தட்டுப்பாடு, உர பிரச்சினை என மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் விதத்தில் அரசாங்கத்தின் மோசமான தீர்மானங்கள் அமைந்துள்ளன என்றும் இதற்கு விவசாயத்துறை அமைச்சர், வர்த்தகத் துறை அமைச்சர் மற்றும் மேலிடத்தில் தீர்மானம் எடுக்கும் நபர்கள் பொறுப்புக்கூறியாகவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

சுசில் பிரேமஜயந்த கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சராக பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மாடு முட்டியதில் முதியவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 05

மாடு முட்டியதால் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மணக்கும்பான், 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நல்லையா கணேஸ்வரன் (வயது 62) என்பவரே உயிரிழந்தார்.

இவர் கடந்த 29ஆம் திகதி மாட்டை கட்டமுற்பட்டபோது அது அவரின் வயிற்றில் முட்டியது. இதில் படுகாயமடைந்தவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்தார். (ஐ-3)

## உள்ளே இருந்த...

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை ஜனாதிபதி நீக்கியுள்ளார். அரசு மற்றும் அரசின் திட்டம் போன்ற கொள்கைகளை அவர் பல சந்தர்ப்பங்களில் விமர்சித்துள்ளார். இதன் காரணமாக ஜனாதிபதி அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் என்ற வகையில் அரசின் கொள்கைகளை பாதுகாக்கும் பொறுப்பு எனக்கும் உள்ளது. அந்தக் கொள்கைகளில் தவறு இருந்தால், அதைப் பற்றி பேச இடங்கள் உள்ளன.

அமைச்சரவையில் பேசலாம். மேலும், இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியை சந்திக்கின்றனர். சில நேரங்களில் அவர்கள் அதைப் பற்றி பேசலாம். அவர்கள் ஒரு அணிக்காக விளையாடினால், அந்த அணிக்குள் பேசவேண்டும். அவர்கள் வெளியில் பேசக்கூடாது.

மூத்த அமைச்சர்கள் என்ற முறையில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். முதுகெலும்பு நேராக இருக்க வேண்டும் மற்றும் உள்ளே பேச வேண்டும். ஜனாதிபதி சரியான முடிவை எடுத்துள்ளார். இது முன்னரே எடுத்திருக்க வேண்டிய முடிவு.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை புரிந்து கொள்ளாமல் அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு ஏற்புடையதல்ல. அம்பலமான அரசியலை அமைச்சரவையில் சேர்க்க முடியாது. அமைச்சரவைக்குள் எதனையும் பேசி தீர்த்துக்கொள்ள ஜனாதிபதி முழுமையான சுதந்திரம் வழங்கியுள்ளார்.

மேலும் குழு கூட்டங்களில் பேசக் கூடிய இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியை சந்திக்கும் போது பேச முடியும். ஆனால் அதை விமர்சிப்பது தவறு. ஜனாதிபதியை நம்பி இந்த நாட்டின் பெரும் பான்மையான மக்கள் அவருக்கு வழங்கிய ஆணையைப் பாதுகாக்க வேண்டும். - என்றார்.

## கோணேஸ்வரத்தில்...

கும் வகையில் நேற்றுக் காலை திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்துக்கு சென்ற அவர், அங்கு விசேட பூசை வழிபாடு களில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாரா ளுமன்ற உறுப்பினர் களான இம்ரான் மஹ் ரூப், புத்திக பத்திரண, கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் வைத்தியர் அருண மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள், செயல் பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

## கொரோவால்...

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 55 ஆக உயர்ந்துள்ளது என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்தது. (ஐ)

## சர்வதேச நாணய...

அனுமதி அளிக்கவில்லை என்று தெரிய வருகின்றது. நிதியுதவிக்காக சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகளை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லாமையே இதற்குக் காரணம் என்று தெரிய வருகின்றது.

அரசாங்கம் கோரினால் இலங்கைக்கு நிதி அளிப்பது தொடர்பில் ஆராயப்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பணித் தலைவர் மசாஹிரோ நோசாகி கூறியிருந்தார். இந்நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்காக கூடிய அமைச்சரவை இணக்கமின்றி நிறைவடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிவாரணங்கள்...

ளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நிதியமைச்சரால் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டன. இந்த நிவாரணப் பொதியை வழங்குவதற்கு அரசாங்கம் 22 ஆயிரத்து 900 கோடி ரூபாவை செலவிடவுள்ளது.

இதனிடையே அரசாங்கம் இந்த நிவாரணப் பொதியை எதற்காக அறிமுகப் படுத்தியது? மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா விடுக்கும் அழுத்தம் இதற்கு காரணமா? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் உதய கம்மன்பில, மாகாண சபை தேர்தல் தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலும் அரசாங்கத்திற்குள் இடம் பெறவில்லை. எந்தவொரு நாட்டிற்கும் அடிபணியும் கலாசாரம் தம்மிடம் இல்லை எனவும் பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே அரசாங்கம் செயல்படுகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## யாழ். வருகிறார்...

அம்மன் மற்றும் விகாரைகளில் வழிபாடாற்றுவார்.

தொடர்ந்து அமரர் ராஜமகேந்திரன் நினைவாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை கையளிப்பார். இதன் பின்னர் திருநகர் கூட்டத்தில் உரையாற்றும் அவர், இரவு 7 மணிக்கு யாழ். வியாபார சமூகத்தினரை சந்தித்துப் பேசுவார்.

இதன்பின்னர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சஜித் செல்லும் அவர், மீண்டும் 11 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் வருவார். அன்றைய தினம் முக்கியத்துவமிக்க சந்திப்புகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து, மறுநாள் 12ஆம் திகதி நல்லூர் கோவிலுக்கு செல்லும் அவர், அன்றைய தினமே யாழ். ஆயரையும் சந்தித்து கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 19ஆவது...

மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனியொரு கட்சியால் மீண்டும் ஆட்சியமைக்க முடி யாது. அதனால் திருடர்களும் ஊழல்வாதிகளும் ஆதிக்கம் இல்லாத புதிய கூட்டணி அரசாங்கத்தின் கீழ் பரந்துப்பட்ட புதியஅரசியல் கொள்கை யொன்றை தயாரித்து புதிய பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்க சுதந்திரக் கட்சி தயாராக இருக்கிறது.

பிரதேச சபையிலிருந்து பாராளுமன்றம் வரையில் சகல பிரிவுகளிலும் திருடர்களே இருக்கிறார்கள். பிரதேச சபையின் மணல் அனுமதிப் பத்திரத்தினூடாகவும் பணம் உழைக்கிறார்கள். பாராளுமன்றத்துக்கு சென்றதும் வியாபார நடவடிக்கைகளினூடாகவும் விலை மனுக் கோரல்களினூடாகவும் பணம் உழைக்கிறார்கள்.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவையும் ஒரேடியாக தூக்கி எறிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# எரிவாயு வெடிப்பு சம்பங்களால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு!

## இலங்கை காப்புறுதி நிறுவனத்துக்கு பணிப்பு



கொழும்பு, ஜன. 05

**நாடு முழுவதும் இடம்பெறும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை காப்புறுதி நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.**

எரிவாயு நிறுவனங்கள் இலங்கை காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்துள்ளன.

எனவே, அந்த நிறுவனங்களின் எரிவாயுவால் ஏற்படும் விபத்துக்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் ன்று நிதி அமைச்சர் சுட்டிக் காட்டினார். இது தொடர்பில் காப்புறுதி நிறுவனத்திற்கு தாம் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)



## வாகனத்தையும் ஒப்படைத்துவிட்டு ஓட்டோவில் வீடு திரும்பினார் சுசில்

கொழும்பு, ஜன. 05

ஜனாதிபதியினால் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சில் இருந்து ஓட்டோவில் வீடு திரும்பினார்.

அரசுக்கு எதிரான அவரது அண்மைய விமர்சனக் கருத்துகளுக்குப் பின்னர் சுசில் பிரேமஜயந்த உடன் அமுலுக்கு வரும் வகையில் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்று கல்வி அமைச்சுக்கு சென்றிருந்த அவர், ஆவணங்களை எடுத்துக்கொண்டு அமைச்சில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறினார்.

இதன்போது இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட வாகனத்தையும் ஒப்படைத்த காரணத்தினால் அவர் ஓட்டோவில் வீடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விவசாயியின் சடலம் மீட்பு



அக்கரைப்பற்று, ஜன. 05

ஆலையடிவேம்பு, பட்டிமேடு வடக்கு பள்ளப்பாமங்கை துரிசில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அள்ளுண்டு சென்ற விவசாயின் சடலம் நேற்று புளியம்பத்தை கிராமத்தின் முன்பகுதியில் உள்ள நரகக்குழி என அழைக்கப்படும் ஆற்றின் நடுப்பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் புளியம்பத்தை கிராமத்தை சேர்ந்த 57வயதுடைய கணபதிப்பிள்ளை கிருபைராஜா என அடையாளம் காணப்பட்டார்.

ஆற்றின் நடுப்பகுதியில் சடலமொன்று காணப்படுவதாக மீனவர் ஒருவரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு சென்ற உறவினர்கள் அதிகாரிகளின் அனுமதியின் பிரகாரம் தோணியின் மூலமாக சடலத்தை ஆற்றின் கரைக்கு கொண்டுவந்தனர்.

துரிசில் வெள்ளப்பெருக்குஅதிகரித்த நிலையில் வெள்ளநீரை வெளியேற்ற அதில் இருந்த பலகையை கழற்ற முற்பட்ட சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (அ)







# பாசையூர் கடற்கரையில் 30 அடி உயர வெளிச்சவீடு!



யாழ்ப்பாணம், ஜன. 05

பாசையூர் குடாக்கடல் கரையில் 30 அடி உயரமான வெளிச்ச வீடு அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான கள ஆய்வுப் பணி நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுதர்சன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

பல தசாப்த காலமாக பாசையூர், குருநகர், சாவற்கட்டு, காக்கைதீவு, நாவாந்துறை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தாம் தொழில் செய்யும கடலில் வெளிச்சவீடு இன்மையால் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் பல தரப்பினருக்கும் முறையிட்டனர்.

இந்த நிலையில், கடற்றொழில் அமைச்சால் அந்தப் பகுதியில் வெளிச்சவீடு அமைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்காக 4 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம் குடாக்கடல் கரைப்பகுதிக்கு சென்ற ஆய்வுக் குழு அங்கு 30 அடி உயரமான வெளிச்சவீட்டை நிர்மாணிப்பதற்கான முன்னாயத்தங்களை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, குருநகர் ஐந்து மாடி குடியிருப்பு பகுதி மக்களின் பாதுகாப்பு கருதி அங்குள்ள நீர்த்தாங்கியில் இடிதாங்கி அமைக்கும் பணியும் முன்டுக்கப்பட்டுள்ளது. இதற்காகவும், 5 இலட்சம் ரூபாயை கடற்றொழில் அமைச்சு ஒதுக்கியுள்ளது என்றும் கூறப்பட்டது. (ஐ-2)

## பொருளாதாரத் திட்டம் ஒன்றை தயாரிக்க முயற்சிக்கிறது அரசு

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும தகவல்

கொழும்பு, ஜன. 05

பொருளாதார வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது குறித்து பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இந்தப் பணியில் எதிர்க்கட்சியினரையும் இணைத்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்ப முடியாது எனவும், பொருளாதார வேலைத் திட்டமொன்று இருக்கிறதா என்பது குறித்தும் ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் டலஸ் அழகப் பெரும மேற்கண்டவாறு கூறினார். (அ)

## உணவுக்காக பிச்சை எடுக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளது!

### ரோஹினி கவிரத்ன எம். பி

கொழும்பு, ஜன.5

நமது நாட்டில் டொலருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் உணவுக்காக பிச்சையெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி 665 கோடி ரூபாய் அச்சிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணம் அச்சிடப்பட்டால் பணவீக்கம் இருக்காது என்று அரசாங்கம் கூறுகிறது. சுடுகாட்டில் பிணங்கள் குவிந்து கிடப்பதாகவும் எரிக்க எரிவாயு இல்லை என்றும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. தற்பெருமை தேவையில்லை. இரவு கடைகள் இன்று மூடப்பட்டுள்ளன. எரிவாயு இல்லாததன் காரணமாக உணவகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று எமது நாட்டை பஞ்சம் சூழ்ந்துள்ளது. விவசாய அமைச்சால் பஸில் ராஜபக்ஷ இன்று கோமா நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். பெரும்போகத்தில் நாட்டின் அறுவடையில் பாதியளவு மட்டுமே அறுவடை செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## அரசடி பெண் கொலை; வழக்கு தவணையிடப்பட்டது

மட்டக்களப்பு, ஜன. 05

மட்டக்களப்பு அரசடியில் கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்ட பெண் தொடர்பான வழக்கு வரும் 11 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.

கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொலை தொடர்பான வழக்கு நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, கொலை சந்தேகநபர்களை பிடித்தவர் களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. இதைத் தொடர்ந்து வழக்கு வரும் 11ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (ஐ- 6)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கடைகுட்டி சிங்கம்,எங்கேயும் காதல் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை




**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : களீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு